பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 04 திங்கட்கிழமை 20.08.2018 | கதிர் 288

**இனி இது ரகசியம் அல்ல!**

தெற்கில் அரசியல் நிலை வரம் மாறுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் மீண் டும் மஹிந்த ராஜபக்ஷவே நேரடி யாகக் களமிறங்கும் வாய்ப்புகள் பிரகாசமாகி வருகின்றன என்ற கருத்துப் பரவத் தொடங்கியதுமே அவருக்கான செல்வாக்கும் எகிறு கின்றது பக்கம் 14

# கூட்டமைப்பைப் பலவீனப்படுத்த நினைத்து தமிழினத்தின் இலக்கைச் சிதைத்துவிடாதீர்!



## முதலமைச்சரிடம் கோருகிறார் டெனீஸ்வரன்



யாழ்ப்பாணம், ஓக.20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பல வீனப்படுத்தவேண்டுமென்று நினைத் துக்கொண்டு எம்மினத்தின் எதிர்கால இலக்கைச்சிதைத்துவிடாதீர்கள். பலர் இதனைச்செய்வதற்கு முனைப்பாக உள்ளனர். நீங்கள் ஒரு பெரிய மனிதர். தூர நோக்கு டையவர். இந் தத் தவறைச் செய்ய மாட் டீர்கள் என நம்புகிறேன்.

– இவ்வாறு வடக்கு மாகாண முதல மைச்சர்சி.வீ.விக்னேஸ்வரனிடம்கோரிக்கை விடுத்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப் பினர் சட்டத்தரணி பா.டெனீஸ் வரன்.

ஊடகங்களுக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை விடுத்துள்ள ஊடக அறிக் கையிலேயே அவர் அவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வரு மாறு:-


கடந்த கால உயிர்த்தியாகங்களுக்கு அர்த்தம் தேடவேண்டும்.

முன்னாள் போராளிகளையும் மாவீரர் குடும்பங்களையும் உள்வாங்கிபுதியகட்சிஒன்றை உருவாக்குவதற்கான சில யோசனைகள்கடந்தகாலத் தில் என் பக்கம் 14

### ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாமா?

# உயர்நீதிமன்றை நாட மஹிந்த தரப்பு முடிவு!

### அவரே நேற்றுத் தெரிவிப்பு



கொழும்பு, ஓகஸ்ட் 20


2019 நவம்பரில் நடக்கவிருக்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீளவும் போட்டியிடலாமா என்பது குறித்து உயர்நீதிமன்றத்தின் விளக்கத் தைப் பெறுவதற்கு அவரின் தரப்பில் தீர்மானிக் கப்பட்டிருக்கின் றது.

இந்தத் தகவலை அவரே நேற்று வெளியிட் டார். பக்கம் 14

# ஜனாதிபதியும் பிரதமரும் புதனன்று வடக்கே வருகை

### மயிலிட்டி துறைமுக அபிவிருத்திப் பணியை ஆரம்பித்து வைக்க





யாழ்ப்பாணத்திற்கு நாளை மறுதினம் புதன்கிழமை விஜயம் செய்யவுள்ள ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன மயிலிட்டி துறைமுகத்தை நவீன மயப்படுத்தும் அபிவிருத்தி வேலையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

யாழ். காங்கேசன்துறை, மயிலிட்டித் துறைமுகம் கடந்த 27 பக்கம் 14

## ரயில் கட்டணம் ஒக்ரோபர் முதல் உயர்வடையும்

கொழும்பு, ஓக.20

ரயில் கட்டணங்களை 15 சதவீதத்தால் அதிகரிக் கப் பக்கம் 14

## விலக்குப் பிடிக்கச் சென்றவர் பரிதாபமாக உயிரிழப்பு



### காரைநகர் கருங்காலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக.20

காரைநகர்ப் பகுதியில் தனது மரு மகன் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட குழுவினரைத்தடுத்து, விலக்குப்பிடிக்கச் சென்ற குடும் பஸ்தர் அந்த இழுபறியில் சிக் குண்டு விழுந்தார். பக்கம் 14

## ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு நேற்று வருகை

கொழும்பு,ஓக. 20

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட் சுனோரி ஒனோடெரா (Itsunori Onodera) உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு நேற்று இலங்கை வந்து சேர்ந்தார்.

ஜப்பானிய பாதுகாப்பு பக்கம் 14

## வெடுக்குநாறிமலையை மீட்க செவ்வாயன்று ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஓக.20

வவுனியா நெடுங்கேணி – ஒலுமடுவில் உள்ள வெடுக்கு நாறி மலை யைத் தொல்லியல் திணைக்களம் உரிமை கோருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிர தேச மக்களால் நாளை செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட் டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக பக்கம் 14

## 'ஸ்ரீலங்கன்' விமான சேவையின் முன்னாள் அதிகாரி விரைவில் கைது?

கடந்த அரசாங்க காலத் தில் ஸ்ரீ லங்கன் விமான சேவையில் கடமையாற் றிய அதிகாரியொருவர் விரையில் கைது செய்யப் பட வுள்ளார் எனத் தகவல் கள் வெளியாகியுள்ளன. பக்கம் 14

# எமது இளைஞர்கள் சுதந்திர தாகம் கொண்டு மீள ஒன்றுபட்டு எழுவர் என அஞ்சுகிறது அரசு

### அவர்களைத் திசை திருப்பும் எத்தனம் குறித்து விக்கி விசனத்துடன் விளக்கம்

யாழ்ப்பாணம், ஓக.20

"எங்கே எமது இளைஞர்கள் மீண்டும் சுதந்திர தாகம் கொண்டு ஒன்றுபட்டு விடுவார்களோ என்ற பயம் அரசாங்கத் திற்கு இப்போதும் இருக்கின்றது.

"எமது இளைஞர், யுவதிகளைத் தமது இயல்பான உயரிய சிந்தனைகளை மேற்கொள்ள விடாது தடுக்கும் நோக்கு டன் அவர்களுக்குப் போதைப் பொருள் பாவனை, கலாசார சீரழிவு முறைகள், ஆடம்பர வாழ்க்கை முறைமை, படாடோப மோட்டார் சைக்கிள் பக்கம் 03

# புலிகள் குறித்த கருத்துக்காக மன்னிப்புக் கோரமாட்டேன்!

## விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் விடுதலைப் புலிகள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்காக மன்னிப்புக் கோரவோ, அந்தக் கருத்தைத் தான் விலக்கிக் கொள்ளவோ போவதில்லையென்று முன்னாள் இராஜாங்க அமைச்சரான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மீண்டும் வர வேண்டும் என்று அரச நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய விஜயகலா மகேஸ்வரன், அதனால் இராஜாங்க அமைச்சர் பதவியை இழந்தார். அவருக்கு எதிரான நடவடிக்கை குறித்து விசாரணைகளும் நடத்தப்பட்டன.

இந்நிலையில், ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் எதனைக் கூறினேனோ அதே நிலைப்பாட்டில் தான் இருக்கிறேன். நான் கூறிய கருத்தை விலக்கிக் கொண்டு எனது கௌரவத்தையும் மரியாதையையும் இழக்க



மாட்டேன்.

விசாரணை அறிக்கை குறித்து நான் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. ஆனால் ஊடகங்கள் அதில் ஆர்வம் காட்டுகின்றன.

எனக்கு எதிராக எந்த நடவடிக்கை எடுத்தாலும், அதனை வரவேற்பேன். அதற்கு அச்சப்படமாட்டேன். என் மீது நம்பிக்கை கொண்ட மக்களுக்காகத் தொடர்ந்து பணியாற்றுவேன்.

நான் தமிழ் மண்ணில் பிறந்தேன். தெற்கிலுள்ள மக்கள் எங்களுடன் வாழ்ந்திருந்தால், அவர்களும் நான் கூறிய உணர்வுகளையே வெளிப்படுத்தியிருப்பார்கள்.

இன்னும் பல முக்கிய அரசியல்வாதிகள் விசாரணைக்காக வரிசையில் இருக்கிறார்கள். என்மீதான விசாரணையும் அத்தகைய ஒன்று தான். அதுபற்றி நான் கவலைப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ் மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள், இப்போது எப்படி வாழ்கிறார்கள் என்பதைத் தான் நான் வெளிப்படுத்தினேன்.

அப்போது வல்லுறவு, சிறார் வல்லுறவு, போதைப்பொருள்கள், பாலியல் துன்புறுத்தல்கள், கொலைகள், கொள்ளைகள் பற்றி நாம் கேள்விப்பட்டதில்லை.

ஆனால் இப்போது அதற்குள் தள்ளப்பட்டிருக்கிறோம். நான் இதனை வெளிப்படுத்தியமை மற்றவர்களுக்கு கவலையை ஏற்படுத்தியிருந்தால் அது என்னுடைய தவறு அல்ல.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசை விமர்சிக்க எதிர்க்கட்சிக்கு எதிர்ப்பு கோஷங்கள் இல்லை

கொழும்பு ,ஓக.20



நாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், எதிர்க்கட்சியினர் தற்போது அரசை விமர்சிப்பதற்கான எதிர்ப்பு கோஷங்கள் இல்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அங்குனுகொல பெலஸ்ஸ பிரதேசத்தில் நடை பெற்ற ஆயிரம் கிராமங்கள் - ஆயிரம் குளங்கள் திட்டத்தின் கீழ் இதிகெட்டவெ - மைலதெனிய குளம் மற்றும் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துப் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசு தற்போது நாட்டில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. எனினும் அவை மக்கள் மத்தியில் சென்றடைவதில்லை.

வீணாக பணத்தைச் செலவிட்டு, அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பிரச்சாரங்களை அரசு மேற்கொள்வதில்லை என்பதே இதற்கான காரணம்.

மேலும், நாட்டில் அரசாங்கம் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதால், அரசின் மீது குற்றம் சுமத்த எதிர்க்கட்சியினருக்கு எந்த எதிர்ப்பு கோஷங்களும் இல்லை எனவும் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

# டிசம்பருக்குள் 500 ஏக்கர் காணிகள் விடுவிப்பு; 780 கோடி ரூபாவை ஒதுக்க திறைசேரி இணக்கம்

கொழும்பு, ஓக. 20

வடக்கு - கிழக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள - உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் உள்ளிட்ட, 500 ஏக்கர் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்று புனர்வாழ்வு, மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் செயலர் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

தனியார் காணிகளில் உள்ள இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு நகர்த்தி, டிசெம்பர் மாதத்துக்கு முன்னதாக, அந்தக் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதற்காக, அரசு 78 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இராணுவ முகாம்களை இடமாற்றம் செய்யும் நடவடிக்கையைப் பூர்த்தி செய்வதற்காக, இந்த நிதியை விடுவிப்பதற்கு திறைசேரி அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்தில் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் காணிகளை விடுவித்து, இராணுவம் தமது பாதுகாப்பு எல்லைகளை மீள ஒழுங்குபடுத்தும்.

விடுவிப்பதற்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணிகள், யாழ். மாவட்டத்தில், வலி வடக்கில், அச்சுவேலி, மயிலிட்டி வடக்கு, பகுதிகளிலும், தென்மராட்சியில் கிளாலி, பளை, முகமாலைப் பகுதிகளிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில், முறக்கொட்டாஞ்சேனையிலும் உள்ளன.

இந்தக் காணிகளின் உரிமையாளர்களை உறுதிப்படுத்த, அந்தந்தப் பிரதேச செயலர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கிடைக்கின்ற வாய்ப்புக்களை மக்கள் நலனுக்காகச் செயற்படுத்துங்கள்!

## கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாகிகள் மத்தியில் டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஓக.20

கிடைக்கப்பெறுகின்ற வாய்ப்புகள் ஒவ்வொன்றையும் மக்களின் நலன்களை முன்னிறுத்தியதாக உருவாக்கி எமது மக்களின் வாழ்வியல் தேவைப்பாடுகளை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளை ஒவ்வொருவரும் முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக செயலாளர்கள், பிரதேச நிர்வாக செயலாளர்கள், உதவி நிர்வாக செயலாளர்கள் ஆகியோருடனான சந்திப்பில் தொலைபேசியூடாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் எமக்கு கிடைக்கப்பெற்ற பல வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் எமது மக்களின் நலன்களுக்காக பல்வேறுபட்ட சவால்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து அவற்றை சிறந்தமுறையில் மக்களிடம் எடுத்துச் சென்று நாம் சாதித்துக் காட்டியுள்ளோம். ஆனாலும் அவ்வாறான அரசியல் நிலைமை தற்போது காணப்படவில்லை.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையைப் பார்க்கின்றபோது, நாளுக்கு நாள் எமது மக்களின் அடிப்படைத் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் அதிகரித்துக் கொண்டு வருவதையே காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிலையில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எல்லாம் எமது மக்களின் நலன்களுக்கானதாக மாற்றி அவற்றை பெற்றுக்கொடுப்பதற்கான வழிவகைகளை நாம் முன்னெடுப்பதுடன் மேலும் பல சாதகமான வழிகளை உருவாக்கி அவற்றினூடாகவும் எமது மக்களின் நலன்சார் தேவைகளை பூர்த்திசெய்துகொடுக்க நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.- என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்குப் பல்கலை மாணவர்களின் பகிஷ்கரிப்புக்குத் தீர்வு!

கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தின் தொலைத்தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவம் கற்கை பீடத்தின் மாணவர்கள் இரண்டு வாரங்களுக்கு மேலாக முன்னெடுத்த வகுப்புப் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்துள்ளது.

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இடம்பெற்ற பேச்சின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கமைய முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கை இன்று ஆரம்பமாகவிருக்கிறது;

பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டில் கற்கும் மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்க இருக்கின்றன என வளாகத்தின் பொறுப்பாளர் கலாநிதி வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்தார்.

# இறக்குமதிக்கான வரி அதிகரிப்பினால் உ.கிழங்கு உற்பத்தியாளருக்கு லாபம்

கொழும்பு, ஓக.20

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கிற்கு 40 ரூபா சுங்க வரி விதிக்கப்பட்டமையினால் உள்ளூர் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 140 ரூபாவுக்கும், 160 ரூபாவுக்கும் இடையில் கொள்வனவு செய்யப்படுகிறது என விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமது உற்பத்திக்காக இதுவரையில் கிடைக்கப் பெற்ற ஆகக்கூடிய விலை இதுவாகும் என்று உற்பத்தியாளர்கள், விவசாய அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதேபோன்று, அரிசி இறக்குமதியையும் கட்டுப்படுத்துவதற்காக 25 சதமாக இருந்த அரிசி இறக்குமதிக்கான சுங்க வரி, 70 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உள்ளூர் விவசாயிகள் நெல்லுக்கு ஆகக்கூடிய விலையைப் பெற்று வருகின்றனர். விவசாயிகளின் நலனைக் கருத்திற் கொண்டு அரசு செயற்பட்டு வருகிறது என அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

சிறுபோக நெல் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நெல் சந்தைப்படுத்தும் சபை 38 ரூபா மற்றும் 41 ரூபா உறுதி செய்யப்பட்ட விலைக்கு நெல் கொள்வனவை மேற்கொள்வதினால் தனியார் துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் உறுதி செய்யப்பட்ட விலையிலும் பார்க்க சுமார் 10 ரூபாவினால் அதிகரித்த தொகையில் விவசாயி களிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிரந்தர காணி உறுதிகளை வழங்கும் பணிகளை துரிதப்படுத்தப்படுத்தச் சட்டமூலம்!

கொழும்பு, ஓக. 20

அரச காணிகளுக்கான அனுமதி பத்திரத்தை பெற்றுள்ளவர்களுக்கு நிரந்தர காணி உறுதிகளை வழங்கும் பணிகளை துரிதப்படுத்தும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரசிங்க தெரிவித்துள்ளார்.

பத்து லட்சம் காணி உறுதிகளை பகிர்ந்தளிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் மாத்தறை மாவட்ட நிகழ்வு தெனியாய பஸ்கொட பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு பேசியபோது பிரதமர் இந்த கருத்தை வெளியிட்டார்.

தென் மாகாணத்தில் காலி, வெலிகம மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்களில் வர்த்தக வலயங்கள் ஆரம்பிக்கப்படும். தெனியாய மற்றும் காலி பிரதேசங்களைச் சுற்றுலா வலயங்களாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்துள்ளோம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

தற்போதைய அரசின் மூன்று வருடப் பூர்த்தியை முன்னிட்டு, 'மூச்செடுத்த மூன்று வருடங்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெறும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக மக்களுக்குக் காணி உறுதிகள் வழங்கப்படுகின்றன.

கேகாலை மாவட்ட நிகழ்ச்சித் திட்டம் இன்று கேகாலை சுதந்திர மாவத்தையில் இடம்பெறும். அங்கு இரண்டாயிரத்து 500 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்படும். காலி மாவட்ட நிகழ்ச்சித் திட்டம் பத்தேகம பொது விளையாட்டு மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறும். அங்கு நான்காயிரம் காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு)

## எமது இளைஞர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிராம மக்களிடையே புரிந்துணர்வு, சகோதரத்துவ மனப்பான்மை,சமூக மேம்பாட்டிற்கான கல்வி அறிவு வளர்ச்சியும் அதன் மூலமான வழிகாட்டலும் ஆகிய அனைத்துக் கைங்கரியங்களிலும் சனசமூக நிலையங்கள் மிகப் பொறுப்புடன் செயற்படக் கூடியன. வடபகுதியில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் சில சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் எம்மை மலைக்க வைக்கின்றன. அவர்களின் உயரிய சிந்தனைகள், ஏழைகளுக்கு உதவும் பரோபகார சிந்தனைகள், உயர்வு தாழ்வற்ற சகோதரத்துவ மனப்பான்மை, வலிந்து உதவிகளை நல்குகின்ற தன்மை இவை அனைத்தும் அந்தப் பிரதேச மக்களின் வாழ்வை மலர்ச்சி பெறப் பேருதவி புரிகின்றன.

இதை உணர்ந்துதான் நான் இந்திய உயர்ஸ்தானிகரிடம் எமது வடமாகாண சனசமூக நிலையங்கள் அனைத்தையும் புனருத்தாரணம் செய்ய முன்வருமாறு கேட்டுக்கொண்டுள்ளேன். எமது மத்திய அரசு என் கோரிக்கைக்கு இணங்கினால் அது எமக்கு சார்பாக பரிசீலிக்கப்படும் என்று இந்திய ஸ்தானிகராலயம் கூறியுள்ளது. இது நடந்தேறினால் எமது கிராம மக்களின் வாழ்வு மறுமலர்ச்சி அடையும்.

இன்று விரைந்து மாற்றப்படவேண்டிய பல சூழ்நிலைகள் எமது வாழ்க்கை முறையில் உருவாகியுள்ளன. மத்திய வர்க்க மக்கள் நாளாந்த நுகர்வுப் பொருள்களின் விலைகளை ஈடு செய்ய முடியாத நிலையில் உள்ளனர். பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. எமது ரூபாயின் மதிப்பு சர்வதேச ரீதியில் மிகக் குறைந்து வருகின்றது. எமது வாழ்க்கை முறையை மாற்ற வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. இது கிராம மட்ட மக்களுக்கும் பொருந்தும்.

அரசாங்கம் இலகு கடன்களை அறிமுகப்படுத்தி வருகின்றது. ஆனால் கடன் வாங்கி வாழும் முறையை எமது மக்கள் பலர் வரவேற்பதில்லை. ‘கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கி னான் இலங்கை வேந்தன்’ என்ற கம்பராமாயண வரிகளைக் கேட்டு வாழ்ந்து வந்தவர்கள் எம்மவர். அதனால் அவர்கள் சிந்தனைகள் வித்தியாசமாக அமைந்திருப்பதைக் காணலாம். கிராமிய ரீதியாக ஒவ்வொரு கிராம மக்களும் தங்கள் தங்கள் ஆடம்பர வாழ்க்கை முறைமைகளைத் தவிர்த்து எளிமையான வாழ்க்கை முறைக்குத் திரும்புவதன் மூலமும் உற்பத்தியை பெருக்க உழைப்பதன் மூலமும் சுகமானதும் சுதந்திரமானதுமான ஒரு வாழ்க்கை முறைமையை முன்னெடுக்கலாம் என்று அவர்கள் நம்புகின்றார்கள்.

ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் கலாநிதி என்.எம்.பெரேரா நிதி அமைச்சராக இருந்த போது மேற்கொள்ளப்பட்ட விவசாயப் புரட்சி யாழ். மாவட்ட மக்கள் பலரை விசுவமடு போன்ற பகுதிகளில் கடுமையான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட உந்தித்தள்ளியது. அக் காலப்பகுதியிலேயே வட பகுதியின் பல்லாயிரக் கணக்கான மண் வீடுகள் கல்வீடுகளாக உருமாறின. அன்று எமது விவசாயிகள் மிளகாய்ப் பயிர்ச்செய்கையில் காட்டிய ஆர்வமும் ஊக்கமும் முழு இலங்கை மக்களையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

வெங்காயப் பயிர்ச் செய்கை என்பதுவடபகுதிக்கேமுதன்மைத்துவம் வழங்குகின்ற ஒரு பயிர்ச்செய்கை முறைமையாகும். மிளகாய்ப் பயிர்ச் செய்கை, வெங்காயப் பயிர்ச்செய்கை, மரக்கறி உற்பத்தி, வாழைப்பழ உற்பத்தி,சிறுதானிய பயிர்ச் செய்கைகள், இராசவள்ளிக் கிழங்கு,பீற்றூட், கரட் உற்பத்திகள் என அனைத்து உற்பத்திகளிலும் எமது விவசாயிகள் முன்னிலை வகிக்கக்கூடியவர்கள். எமது பகுதிகளில் விவசாய முன்னெடுப்புகளுக்கு நீர்வளப் பற்றாக்குறை ஒரு மூலகாரணமாக அமைந்துள்ள போதும் நீர்வளத்தைக் கவனமாகப் பயன்படுத்தி சுழல்முறை நீர்ப்பாசனங்களை அறிமுகப்படுத்தி அதில் வெற்றியும் பெற்றுள்ளார்கள் எம் மக்கள். எனவே ஒவ்வொரு கிராமங்களிலும் இவை பற்றிய விழிப்புணர்வு முன்னெடுப்புக்கள் விரைந்து மேற்கொள் எப்படல் வேண்டும். எமதுவிவசாய அமைச்சு இதனை ஓரளவு செய்து வருகின்றது. ஆனால் இவை பற்றிய விழிப்புணர்வு மேலும் பரவ வேண்டும்.

எமது இளைஞர் யுவதிகளைத் தமது இயல்பான உயரிய சிந்தனைகளை மேற்கொள்ள விடாது தடுக்கும் நோக்குடன் அவர்களுக்குப்போதைப்பொருள் பாவனை, கலாச்சார சீரழிவு முறைகள், ஆடம்பர வாழ்க்கை முறைமை,படாடோப மோட்டார் சைக்கிள் பவனி,வாள்வெட்டுக் கலாசாரம், கொலை, களவு போன்றவை அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றது. எங்கே எமது இளைஞர்கள் மீண்டும் சுதந்திரத் தாகம் கொண்டு ஒன்றுபட்டு விடு வார்களோ என்ற பயம் அரசாங்கத்திற்கு இப்பொழுதும் இருக்கின்றது.

இந்நிலை மாற்றப்படுவதற்கு எமது இளைஞர், யுவதிகளுக்கு சிந்தனைத் தெளிவு ஏற்படக் கூடிய விதத்தில் தக்க அறிவுரைகள் கிடைக்க வழிவகுக்க வேண்டும். அவர்கள் சோம்பியிருக்க அனுமதிக்காது முயற்சியாளர்களாக மாற்றவேண்டும். ஒவ்வொரு இளைஞர் யுவதியும் முழு நேர முயற்சியாளர்களாக மாறுகின்றபோது அவர்களுக்கு முறையற்ற சிந்தனைகளைச் சிந்திப்பதற்கோ அல்லது அவற்றுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்கோ நேரம் இல்லாமல் போய்விடும். இதன் மூலம் இன்றைய சமூக நெருக்கடி நிலை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்படலாம். அதாவது எமது இளைய சமுதாயத்தை உற்பத்தியாளர்களாக, புதிய சிந்தனையாளர்களாக நாம் மாற்ற முன்வர வேண்டும்.

மிகுந்த வளம் மிக்க நாடுகளில் கூட அந்த நாட்டின் சிறந்த சிந்தனையாளர்களாக விளங்கிய அரசியல் தலைவர்கள் மக்களைத் தொழில் முயற்சிகளில் ஈடுபடச் செய்வதற்கும் அவர்களை உழைப்பாளிகளாக மாற்றுவதற்கும் பல திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தியிருக்கின்றார்கள். உழைக்காது உண்டு வாழ்தலை அவர்கள் கண்டித்திருக்கின்றார்கள்.

உதாரணத்திற்கு லிபியா நாட்டின் தலைவர் கேணல் கடாபியை நாம் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள முடியும். லிபியா நாடு அதிகமான எண்ணை வளத்தைக் கொண்டுள்ள நாடு.மசகு எண்ணை விற்பதன் மூலம் கோடி கோடியாகப் பணத்தைச் சம்பாதித்த நாடு. அவர்களிடம் கொட்டிக் கிடந்த பணத்தைக் கொண்டு அந்தநாட்டில்வாழும் அனைத்து மக்களையும் சுகமாக இருத்தி வைத்து அவர்களுக்கு உணவு போடக்கூடிய வலிமை அந்த நாட்டுக்கு இருந்தது. ஆனால் லிபியாத் தலைவர் கேணல் கடாபி அந்நாட்டு மக்களுக்கு எதனையும் இலவசமாக வழங்க விரும்பவில்லை. உடு புடவை, வீடு, உணவு, தொழில் செய்வதற்கான வசதிகள்,உதவிகள் என இவற்றை மட்டும் வழங்கி விட்டு லிபிய மக்கள் யாவரும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அவர் உந்து சக்தியாகத் திகழ்ந்தார். அவரின் கருத்துப்படி லிபியாவில் உள்ள எண்ணை வளம் சுமார் 70-80 ஆண்டுகளுக்கு சும்மா இருந்து உணவு உண்ணக்கூடிய அளவிற்கு கொட்டிக் கிடக்கின்றது. ஆனால் தனது மக்கள் அவ்வாறான உழைப்பில்லாது உண்டு வாழும் வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுவிட்டால் 70 ஆண்டுகளுக்கு பின்னர் அவர்களின் நிலை எவ்வாறிருக்கும் என்று யோசித்தார். அவர்கள் உழைக்கப் பிழைக்கத் தெரியாதவர்களாக உணவுக்குத் திண்டாட வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படும் என்று தெரிந்து கொண்டார். எனவே தான் அம் மக்களை விவசாய நடவடிக்கைகள், மீன்பிடி நடவடிக்கைகள், இலத்திரனியல் சாதனங்களைத் தயாரித்தல், ட்றக் வண்டிகள், கார் உற்பத்திகளில் ஈடுபடச்செய்தல் ஆகிய பல முயற்சிகளில் ஈடுபடுவதற்கு உதவிகள் புரிந்து, உழைக்கின்ற மக்களாக அவர்களை உருமாற்றப் பாடுபட்டார். வளம் மிகுந்த நாடு ஆகையால் வரிச் சுமைகள் அங்கு இருக்கவில்லை. உலகத் தரம் மிக்க மருத்துவ வசதிகள், உற்பத்திச் சாலைகள் ஆகியன அங்கு நிறுவப்பட்டன. அவரின் மக்களை கடாபி உழைப்பாளிகளாக மாற்றினார்.

இன்றைய நிலையில் எமது மக்களும் இவ்வாறான ஒரு நிலைக்கு நெறிப்படுத்திச் செல்லப்படவேண்டியகட்டாயத்தேவை எம்முன் காணப்படுகின்றது. இப்பகுதிகளில் நடைபெற்ற நீண்ட கால யுத்தத்தின் விளைவாக ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் ஏதோ ஒரு வகையில் பாதிப்புகளுக்குள்ளாக்கப்பட்டு துன்பச் சுமைகளை சுமந்து கொண்டு செல்ல வேண்டி இருக்கின்றது. இவர்களின் துயரைத் துடைப்பதற்கு கடல் கடந்த நாடுகளில் உள்ள அவர்களின் உறவுகளும், சமூக அமைப்புகளும், அரசுசாரா நிறுவனங்களும், பரோபகாரிகளும், தனவந்தர்களும் பல்வேறு உதவிகளைப் புரிந்து வருகின்றார்கள் என்பது உண்மைதான். எமது மக்களும் இவ்வாறான உதவிகள் கிடைக்கப் பெறுகின்ற போது தமது துன்பச் சுமைகளில் இருந்து சற்று விடுபட்டு இவ் உதவிகளுடன் வாழத் தலைப்பட்டுள்ளார்கள். ஆனால் அதன் விளைவு எம்முள் பலரின் மத்தியில் உழைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாது போய் விட்டது.தற்போது கிடைக்கின்ற உதவிகள் தொடர்ச்சியாகக் கிடைக்கும் என உறுதிப்படுத்தப் படமுடியாதவை. இந்த உதவிகள் நிறுத்தப்படுகின்ற போது எம் மக்கள் உதவியற்றவர்களாக, உழைக்க வழி தெரியாதவர்களாக விடப்படுவார்கள். அப்போது அவர்கள்குறுக்கு வழிகளில் பணத்தைத் தேட முயல வேண்டியிருக்கும். இன்றைய பல கொலை, கொள்ளைகள் போன்றவை இவ்வாறு கைவிடப் பட்டவர்களால் இயற்றப்படுகின்றனவோ என்ற சந்தேகம் எழாமலில்லை.

ஆகவேதான் எம் மக்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகள் அந்தந்த உதவிகளை மூலதனமாகக் கொண்டு அவற்றின் மூலம் வாழ்வாதார முயற்சிக்கான தொழில் முன்னெடுப்புக்களை மேற்கொள்ளக்கூடிய வகையில் அவை அமைந்திருக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் பகிரங்கமாகக் கூறிவருகின்றேன். அதாவது எமக்குக் கிடைக்கும் உதவிகள் நுகர்வதற்குப் பாவிக்கப்படாமல் உற்பத்தியை உண்டு பண்ண – பெருகச்செய்ய – உதவ வேண்டும். அவ்வாறில்லாமல் அவ்வப்போது வழங்கப்படுகின்ற உதவிகள் மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கும், கைத்தொலைபேசிகள் வாங்குவதற்கும், ஐஸ் பெட்டி வாங்குவதற்கும் பாவிக்கப்பட்டால் எம்மக்களை சோம்பேறிகளாக்குவதற்கான உதவிகளாகவே அவற்றை நாங்கள் பார்க்க வேண்டியுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கின்ற எமது உறவுகள் இங்கு வருகை தருகின்ற போது தமக்கு மிக வசதியான நாள்களைத் தெரிவு செய்து கொண்டே இங்கு வருகை தருவார்கள். மேலை நாடுகளில் குளிர் கூடுகின்ற போது அவர்கள் இங்கே வருகை தருகின்றார்கள். அதேநேரம் எமது பிள்ளைகள் அக்காலப் பகுதியில்தான் அவர்களது க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான இறுதி ஆயத்த முயற்சிகளிலோ அல்லது பரீட்சைகளிலோ தோற்றிக் கொண்டிருப்பார்கள். வருகின்ற உறவினர்களுக்கு அதைப் பற்றியெல்லாம் கவலை இல்லை. அவர்கள் மூன்று கிழமை மட்டில் இங்கு வந்து தங்கியிருந்து அரட்டை அடித்து உல்லாசமாக பொழுதைப் போக்கிவிட்டு திரும்புகின்ற போது அவர்களை ஆதரித்த நன்றிக் கடனுக்காக அந்த வீட்டுப் பையனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு மூன்று லட்சம் ரூபா பணத்தைக் கொடுத்து விட்டுச் செல்வார்கள். எம்மவர்களும் வாயெல்லாம் பல்லாக இளித்துபடி அப்பணத்தை வேண்டி மோட்டார் சைக்கிள் வாங்கிவிட்டு பின்னர் அதற்குப் பெற்றோல் நிரப்புவதற்கே பணமின்றி ஐம்பது ரூபாய்க்குப் பெற்றோல்,நூறு ரூபாய்க்குப் பெற்றோல் என்று சிரமப்பட்டுப் போட்டுக்கொண்டு திரிவார்கள். நான் இங்கு எதனையும் மிகைப்படுத்திக் கூற வில்லை. நான் இங்கு அறிந்து கொண்டுள்ள யதார்த்தத்தை மட்டுமே எடுத்துக் கூறுகின்றேன். மூன்று லட்சம் ரூபா மோட்டார் சைக்கிள் வாங்கினால் அதற்குப் பெற்றோல் அடிக்கப் பணம் இல்லை. ரூ50,000 கைத் தொலைபேசி வாங்குகின்றார்கள். ஆனால் தொலைபேசியில் பேசுவதற்கு காசு இல்லை. இது தான் இன்றைய இளைஞர்களின் நிலை. இந்த இழிநிலைகள் மாற்றப்பட வேண்டும். இளைஞர்களை சக்தி மிக்கவர்களாக, கல்வியில் மேம்பட்டவர்களாக, உழைப்பாளிகளாக, நாட்டின் வருங்காலத் தலைவர்களாக மாற்றுவதற்கு முயல வேண்டும். பொதுவாக எந்தவொரு பொருளும் இலவசமாக எமக்குத் தேவையில்லை என்ற சிந்தனை மேலோங்கச் செய்ய வேண்டும். ஆனால் இலவசமாகக் கிடைத்தால் அது வருங்கால மேம்பாட்டுக்கு உதவ வேண்டுமே ஒழிய நுகர்பொருள்களை வாங்கி பணத்தை விரயம் செய்ய இடமளித்தலாகாது.

அரசாங்க உதவிகளும் அப்படித்தான். பல உதவிகள் எம்மைக் கட்டிப்போடவே உதவுகின்றன. மகாவலி அதிகார சபையானது எமக்கு மகாவலி நீரைத் தருவதாகக் கூறித்தான் வடமாகாணத்தினுள் வந்தது. 30 வருடத்திற்கும் மேலாகமகாவலி நீர் ‘இந்தா வரப்போகின்றது’ ‘அந்தா வரப் போகின்றது’ என்று கூறித்தான் மகாவலி செயற்திட்டங்களை வகுத்தார்கள். இன்னமும் ஒரு துளி நீர் ஏனும் வரவில்லை. எமது பொறியியலாளர்கள் அது என்றும் வராது என்றே கூறுகின்றார்கள். ஆனால் அதை வைத்து என்ன செய்துள்ளது அரசாங்கம்? நாட்டின் இதர பாகங்களில் இருந்து மகாவலி நீரைக் கொண்டு வருவதால் இங்கு தாம் நினைத்தபடி வலயங்களை அமைத்தார்கள். ’L’வலயத்தில் குடியிருத்தப்படும் மக்கள் கூட்டம் நாட்டின் இன விகிதாசாரத்தை ஒட்டியே தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறி மணலாற்றைத் தற்போது வெலி ஓயா ஆக்கி விட்டார்கள்.

2007இல் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் – அதாவது யுத்த காலத்தில் கரவாகப் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானிச் செய்தியில் – மகாவலி வலயமானது முல்லைத்தீவு நகரத்தையும் உள்ளடக்கி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் கணிசமான அளவு காணிகள் மகாவலி அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அதனால்தான் நாயாறில் சிங்கள மீனவர் குடியேற்றங்கள் நடைபெற்றன. நீதிமன்றம் அத்துமீறியவர்கள் என்று அடையாளப்படுத்திய வேற்று மாகாண மக்களை மகாவலி அதிகாரசபை ‘பெர்மிட்’ கொடுத்து அவர்களை அங்கு தொடர்ந்திருக்க வழி வகுத்துள்ளது. இதில் இரண்டு விடயங்கள் அடங்கியுள்ளன. ஒன்று மகாவலி நீர் வரவில்லை என்பது. அத்துடன் அநேகமாக அது வராது என்பது. ஆனால் இரண்டாவது அதை வைத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் பெருவாரியான நிலப்பரப்பில் நாட்டின் இன விகிதாசாரத்தின் அடிப்படையில் மக்களைக் குடியேற்ற தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே தான் நான் கேட்கின்றேன். ‘மகாவலி நீர் எமக்குத் தேவையா? மகாவலி செயற்றிட்டங்கள் எமக்குத் தேவையா? எம்மிடம் இருக்கும் வளங்களைக் கொண்டு எம்மை நாம் பார்த்து வர முடியாதா?’ இவற்றையெல்லாம் எமது மக்கள் பிரதிநிதிகள் சிந்தித்துச்செயலாற்ற வேண்டும். வேற்று உதவிகளைப் பெறமுனைவதால் ஏற்படும் சிக்கல்கள் பற்றி இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள். ‘எம் கையே எமக்குதவி’ என்ற வகையில் நாம் முன்னேற முன்வர வேண்டும். மற்றவர்களின் உதவியை எதிர்பார்த்திருப்பது ஈற்றில் எம்மை சோம்பேறிகளாக்கும் அல்லது சோரம் போனவர்களாக்கும். இன்று நாம் வஞ்சிக்கப்பட்டிருக்கும் நிலைக்குக் காரணம் நாங்களே. நாங்கள் உதவிகள் பெறும் போது எமக்கு உதவுவார்கள் எம்மிடம் எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்று ஆராய வேண்டும். அரசியல் ரீதியாகப் பார்த்தோமானால் நாங்கள் எங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் எதைக் கூறியிருப்பினும் அவற்றை நாம் விட்டுக் கொடுக்க வேண்டும் என்றே இவ்வாறு உதவி புரிபவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். கொழும்பில் எம்மவர் விட்டுக்கொடுக்கும் பெருந் தன்மையின் சூட்சுமம் பற்றி இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எனவே அன்பார்ந்த பொது மக்களே! உங்கள் உங்கள் பகுதிகளில் உள்ள மக்களை ஒன்றிணைக்கவும் அவர்களின் குடியியல் நிலை களை மேம்படுத்தவும் சனசமூக நிலையங்கள் கடுமையாகப் பாடுபட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்டவர்களாக அல்லது சேர்ந்து குழுக்களாகத் தமது வாழ்க்கை முறைகளை, தமது தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக மாறுகின்ற போது எம் மீது எதுவித அழுத்தங்களும் அல்லது அடக்கு முறைகளும் பிரயோகிக்க முடியாத ஒரு நிலை உருவாகும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தேர்தல் ஜுரம் ஆரம்பம்

ஆட்சித் தலைமையைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்புகள் – குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்கள் – நெருங்கும்போது நாட்டைப் பீடிக்கும் சில உபாதைகளும், வருத்தங்களும் மீண்டும் இங்கு துளிர் விடத் தொடங்கியிருக் கின்றன.

மொத்தம் ஐந்து மாகாண சபைகளுக்கு விரைவில் தேர்தல் நடத்தியாக வேண்டும். அப்படி நடத்தினால் அதுவும் ஒரு 'மினி' பொதுத் தேர்தல் போன்றே அமையக் கூடியது.

அதே நேரம் இன்னும் பதினைந்து மாதங்களில் – அடுத்த நவம்பரில் – ஆட்சித் தலைவரைத் தீர்மானிக்கும் ஜனாதிபதித் தேர்தல் வரப் போகின்றது.

புதிதாகப் பதவியேற்கும் ஜனாதிபதிக்கு அதற்குப் பின் நான்கு மாதங்களில் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் கைக்கு வந்து விடும். அதனால் அடுத்த 18 முதல் 24 மாத காலத்துக்குள் – அதாவது ஒன்றரை முதல் இரண்டு வருடங்களுக்குள் – நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட்டாகும் நிலை உள்ளது. ஆகவே, தேர்தல் ஜுரம் இப்போதே நாட்டில் வெளிப்படத் தொடங்கி விட்டது. அதிகாரத்துக்காகப் போட்டி போடும் தரப்புகள் இரண்டு விதமான வேலைகளைச் செய்வார்கள்.

ஆட்சியிலும், அதிகாரத்திலும் இருக்கும் தரப்பினர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, அரச சொத்துக்கள், நிதிகளை வாரிக் கொட்டிக் குவித்து, மக்களுக்கான சலுகைத் திட்டங்களை அறிவித்து, அவற்றைத் தமது சாதனைகளாகக் காட்டி, மக்கள் வாக்குகளை அடுத்த தடவை அதிகாரத்துக்கு வருவதற்காகச் சுருட்ட முயலுவார்கள்.

எதிர்தரப்பில் இருப்போர் மக்களையும், தொழிலாளரையும் ஒன்றிணைத்து, அவர்களின் கஷ்டங்களை முன்னிறுத்தி, ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் போன்றவற்றை முன்னெடுக்கச் செய்து, ஆட்சியிலிருப்போருக்கு எதிரான உணர்வலைகளைத் தூண்டித் தமக்கு அரசியல் லாபம் தேடுவார்கள்.

மாகாண மட்டத்திலும் சரி, தேசிய மட்டத்திலும் சரி, தேர்தல்கள் என்றதும் இந்தப் போக்குக் கட்டவிழ்வது தவிர்க்க முடியாததே.

ஆட்சியிலிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கம்பெரலிய திட்டம் என்ற பெயரோடு இவ்வாறு வாரி வழங்குகின்றார் என்றால், மறுபுறம் எதிரணியும் தன் கைவரிசையை காட்டத் தவறவில்லை.

ஆட்சியாளர்களை அகற்றும் போராட்டம் என்ற நடவடிக்கையை சூடாக ஆரம்பிக்கக் கூட்டு எதிரணி தயாராகி விட்டது.

இந்த இரண்டு தரப்புகளுக்கு நடுவிலும், அவற்றுடன் சேர்ந்தும் சேராமலும், தேர்தல் சமயத்தைப் பயன்படுத்தித் தங்கள் கைவரிசையைக் காட்டும் இன்னொரு தரப்பும் இருக்கின்றது.

அது – தொழிற்சங்கத் தரப்பு.

தேர்தல் சூட்டில் அரசியல்வாதிகள் தவித்துக் கொண்டிருக்க அதற்கு நடுவில் வேலை நிறுத்தம், போராட்டங்கள் என்று தங்கள் புஜபலத்தைக் காட்டிக் கறக்கக் கூடியவற்றை இயன்றளவு கறந்து விடுவது அவர்களின் வழமைதான்.

தேர்தல் கிட்டும் சமயங்களில் எல்லாம் தொழிற்சங்கப் போராடங்கள், வேலை நிறுத்தங்கள் சூடுபிடிப்பது தவிர்க்க முடியாத அங்கமே. சில சமயங்களில் அவற்றின் பின்னணியில் அரசியல் எதிரணிகளின் அரூபக் கரங்களும் சம்பந்தப்பட்டிருப்பதும் உண்மைதான்.

இப்போதும் மருத்துவர்கள் வேலை நிறுத்தம், ரயில்வே வேலைநிறுத்தம், தனியார் பஸ் வேலை நிறுத்தம் என்று தொழிற்சங்கப் போராட்டங்களும் தீவிரமடையத் தொடங்கி உள்ளன.

சம்பள அதிகரிப்புக் கோரி ரயில்வே ஊழியர்கள் திடீர் வேலை நிறுத்தங்களை முன்னெடுத்து அரசுத் தலைமைக்குப் பேதி கொடுத்து வருகின்றார்கள்.

ரயில்வே ஊழியர்கள் கேட்கும் சம்பள அதிகரிப்பை வழங்கினால், அதற்கு ஒப்பான அதிகரிப்பை ஏனைய ஊழியர்களும் கோருவார்கள். அப்படிக் கோருவது நியாயமானதாக இருக்கும். அத்தகைய கோரிக்கைகள் வருமானால் நாட்டின் பொருளாதாரம் தாங்காது – என நிதி அமைச்சு வட்டாரங்கள் அரசுக்கு முன்னெச்சரிக்கை தந்துள்ளன.

ஆனால், வேலை நிறுத்த முஸ்தீபில் இறங்கிய ரயில்வே ஊழியர்களை நேற்றுமுன்தினம் தனியாக அழைத்துப் பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தமக்கு எதிர்வரும் வியாழனன்று வரை – மூன்று நாள்கள் – கால அவகாசம் கோரியிருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த மூன்று நாள்களுக்குள் ரயில்வே ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு என்ன தீர்வை, எந்த வகையில் ஜனாதிபதி எட்டுவார் என்பது எவருக்கும் புரியவில்லை.

கடந்த வாரம் சில தினங்கள் ரயில்வே வேலை நிறுத்தத்தால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்ட தென்னிலங்கையில் மீண்டும் ஒரு தடவை அந்த வேலை நிறுத்தம் திரும்பவும் வருமானால் அது பெரும் அரசியல் நெருக்கடியாக மாறும் சூழல் உள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

ஏனைய தொழில் துறையினர் எல்லாம் தேர்தல் காலத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி தாங்கள் தேவைகளை ஈட்டிச் செல்கின்றார்கள். ஆனால் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கிய மலையகத் தோட்டத் தொழிலாளரின் நிலைமை மட்டும் இன்னமும் அப்படியே அவலமாக இழுபடுகின்றது.

அவர்களது நாள் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக்கும் எத்தனம் கூட முதலாளிமார் சம்மேளனத்துடனான பேச்சுகள் பயன் தராத நிலையில் முட்டுக் கட்டை நிலையை எட்டியுள்ளது. அவர்களுக்கு விமோசனம் தருவதற்கு இந்தத் தேர்தல் கால அரசியல் சூட்டை சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் வாய்ப்பாகப் பயன்படுத்தக் கூடாதா?

# இளைஞர்களின் சீரழிவுகளின் பின்னணியில் ஆயுதம் தாங்கிய சீருடை அணிந்தவர்களே!



சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

எமது இளைஞர்களின் இன்றைய சீரழிவுகளின் பின்னணியில் ஆயுதம் தாங்கிய சீருடை அணிந்தவர்களே இருக்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் 30ஆவது மாவட்ட மட்ட விளையாட்டு நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர்கள் சம்மேளனத்தினால் பரந்தன் இளைஞர் வட்டக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1970ஆம் ஆண்டுளில் தமிழ்த் தலைவர்கள் அகிம்சை ரீதியில் போராடும் போது அப்போதிருந்த இளைஞர்கள் தமது இனத்தின் மீது சிங்கள தேசம் புரிந்த அடக்கு முறைகளுக்கு எதிராக பல முறைகளில் செயற்பட்டார்கள்.

ஆனால் இன்றைய இளைஞர்களை நம் இனம் பற்றியோ, தேசம் பற்றியோ சிந்திக்கவிடாது அவர்களுக்கு வேறுவிதமான சிந்தனைகளை ஊட்டிவிடலாம் என சிங்கள தேசம் கங்கணம் கட்டி நிற்கிறது.

அதற்கு ஒரு சில இளைஞர்கள் அடிமையானமைடன், போதைப் பொருள் மற்றும் வாள்வெட்டு எனப் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

எம் இளைஞர்களின் இன்றைய சீரழிவுகளுக்கு பின்னணியில் இருப்பவர்கள் ஆயுதம் தாங்கிய சீருடை அணிந்தவர்களே. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களான பாஸ்கரா, பாலமுரளி மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (க)

# விடுதலைப்புலிகளிடம் இருந்த ஆயுதங்கள் தற்பொழுது முஸ்லிம் அரசியல்வாதிகளிடம்!

### புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரிடம் இருந்த ஆயுதங்கள் தற்பொழுது முஸ்லிம் அரசியல்வாதிகளிடமே இருக்கின்றன என புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் இன்பராஜா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் வெளி நாடுகளுக்குச் சென்றனர். அவர்களிடம் இருந்த 5 ஆயிரத்துக்கும் அதிகமான ஆயுதங்கள் தற்பொழுது எங்குள்ளன?

இத்தனை ஆயுதங்களும் முஸ்லிம் அரசியல்வாதிகளிடமே உள்ளன. இந்த ஆயுத பலத்தை வைத்துக் கொண்டுதான் ஹிஸ்புல்லா, ரிஷாத் பதியுதீன் போன்றோர் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடும் எனக் அச்சுறுத்துகின்றனர்.

அத்துடன், கோவிலைஉடைத்து பள்ளிவாசல் கட்டுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். இந்த விடயத்தில் ஏன் அரசாங்கம் மௌனம் காக்கின்றது? காத்தான்குடி, கிண்ணியா, மூதூர் பிரதேசங்களிலும் இந்த ஆயுதங்கள் இருக்கின்றன எனத்தகவல்கள் உள்ளன. இது தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, சிங்கள மக்களுக்கும் பிரச்சினைக்குரியது.

எந்தவொரு அமைச்சருக்கும் புலிகள் வர வேண்டும் எனக் கூற முடியும். இருப்பினும், புலிகளின் உறுப்பினர்களாக இருந்த எமக்குத்தான் தெரியும், அவ்வாறு ஒன்று நடைபெறாது என்பது. நாம் விரும்பியோ, விரும்பாமலோ புலிகள் அமைப்பில் இணைந்தோம்.

இந்த நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பாட்டால், நாம் 12 ஆயிரம் பேரும் இந்நாட்டைப் பாதுகாக்க படையில் இணைவோம். எமக்கு வேறு ஒரு நாடு தேவையில்லை. இருப்பினும், தமிழ் அரசியல் தலைவர்கள் இதற்கு உடன்படமாட்டார்கள் .

தமிழ் அரசியல்வாதிகளுக்கு திரும்பவும் ஓர் ஆயுதக் கலாச்சாரத்தைக் கொண்டுவரவே தேவையாகவுள்ளது.- எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நல்லூர் உற்சவத்தை ஒட்டிய கந்தபுராண நிகழ்வில் இன்று

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் "கந்த புராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்'' என்ற தொனிப் பொருளில், நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டுக் கந்த புராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் "கந்த புராண எழுச்சி அருள் நெறி விழா – 2018" நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் ஐந்தாம் நாள் நிகழ்வுகள், இன்று திங்கட்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் மாலை 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நவாலி கதிர்காம முருகன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திரு முன்னிலையில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறும். யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறை, இந்து நாகரிகத் துறை மேனாட் தலைவர் பேராசிரியர் நாச்சியார் செல்வநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, சண்டிலிப்பாய் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் யாழ். பல்கலைக் கழகச் சித்தமருத்துவ அலகின் யோகா விரிவுரையாளர், ஆன்மீகப் பிரசாரகர் சி.உமாசுதனின் "திருக்கை வேல் போற்றி போற்றி" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவு, செல்வி வைசாலினி யோகராஜனின் தனியிசைக் கச்சேரி, சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறவுள்ளன.

உற்சவ காலச் சிறப்புச் சொற்பொழிவின் போது பத்து வினாக்கள் அடங்கிய வினாக் கொத்து அன்றைய நிகழ்வுச் சொற்பொழிவினை உள்ளடக்கியதாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, அன்றைய தினமே விடைத் தாள்கள் மாணவர்களிடமிருந்து பெறப்படும். முதல் இருபது நாள்களிலும் விடையளித்த மாணவர்களில் முன்னிலை பெறும் ஐந்து மாணவர்களுக்கு ஐந்து துவிச்சக்கர வண்டிகளும் கற்றல் உபகரணங்களும் பரிசாக வழங்கப்படும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# நல்லூர் தெய்வீக இசையரங்கில் இன்று இரு இசைக் கச்சேரிகள்

நல்லூர், ஓக.19

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை யொட்டி, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 – 8.15 வரை இரு இசைக் கச்சேரிகள் இடம்பெறும்.

முதலாவது கச்சேரியில் தரங்கிணி பால முருகனின் பாட்டுக்கு, வயலின் – ப.காயத்திரி, மிருதங்கம் – என்.சதீஸ்குமார், முகர்சிங் – சி.மோகன்.

அடுத்த இசைக் கச்சேரியில் தில்லையம்பலம் கருணாகரனின் பாட்டுக்குவயலின்–அ.ஜெயராமன், மிருதங்கம் – பி.ஞானவேல், கடம் – எஸ்.பிரணவன்.

## நாளை

21.08.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : மூலம் பி.இ 3.45 வரை
திதி : தசமி மு.ப 8.24 வரை
சுபநேரம் : 10.35 – 12.05 வரை
இராகுகாலம் : 3.05 – 4.35 வரை

# தமிழர் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க பிரபா கணேசன் முயற்சிக்கின்றாராம்!

## வவுனியா நகர சபையின் ரிஷாத் கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டு

வடக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவை சீர்குலைக்கும் வகையில் முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசனினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையை அனைத்து சமூகங்களும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என வவுனியா நகர சபை உறுப்பினர் அப்துல் பாரி தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் தாம் நேற்றைய தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–

வன்னி மாவட்டத்தின் பல பகுதிகளில் பாரியளவில் திட்டமிட்டு ஆக்கிரமிப்பு என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பில் நான் அதிர்ச்சியுற்றுள்ளேன்.

வன்னி மாவட்ட மக்களின் விடயங்களில் மூக்கை நுழைத்து மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்த நிலையில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சி தலைவர், பிரபா கணேசன் வேறு எவருமின்றி இருந்து கொண்டு பிழையான எடுகோள்களை மையப்படுத்தி மீண்டும் வடக்கில் தமிழ் மக்கள் தற்போது அனுபவித்து வரும் உரிமைகளையும், சலுகைகளையும் பறித்தெடுக்கும் அசிங்கத்தனமானதொரு செயற்பாட்டின் முகவராக மாறியுள்ளமையை அவரது அறிக்கையில் காண முடிகின்றது.

வன்னி மாவட்டத்திற்கு முஸ்லிம்கள் பலவந்தமாக கொண்டு வரப்பட்டு குடியமர்த்தப்பட்டு வருகின்றார் என, அதுவும் தேசிய கட்சியில் அங்கம் வகிக்கும் ஒரு முஸ்லிம் அமைச்சர் இதனைச் செய்கிறார் எனவும் பிரபா கணேசன் தெரிவித்துள்ளமையானது முற்றிலும் திட்டமிடப்பட்ட அமைச்சர் – ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான இனவாதத்தின் முகத்தைக் காட்டுகின்றது.

1990ஆம் ஆண்டு வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 3 தசாப்தங்கள் அகதி முகாம்களில் வாழ்ந்த போதும், திரும்பியும் பார்க்காத இந்த பிரபா கணேசன், வடக்கு முஸ்லிம்களின் வரலாற்று பின்னணியையும் அறியாமல் அப்பட்டமான பொய் மூடைகளை ஊடகங்களுக்கு அவிழ்த்து விட்டுள்ளார்.

அரசியலில் மக்களுக்கு எதையும் செய்து சாதனை செய்து காட்ட முடியாத பிரபா கணேசனை கடந்த தேர்தலில் அவரது மக்கள் புறமுதுகு காட்டி ஓட வைத்து அரசியலில் அஸ்தமனத்தைக் காட்டினர்.

இப்படிப்பட்ட செல்வாக்கற்ற பிரபா கணேசன் வடக்கில் அமைதியாக வாழும் மூவினத்தையும் மீண்டும் உசுப்பேத்தி இன ரீதியான பிளவுக்கு வித்திட முனைவதானது இவர் சர்வதேசத்தினதும், இந்த நாட்டில் வடக்கில் மீண்டும் யுத்தம் ஏற்படப் போகின்றது என்ற மாயையினை தோற்றுவித்து வரும் இனவாத சக்திகளினதும் கூலியாக மாறியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்பில் பிரபா கணேசனுக்கு பேசுவதற்கு எவ்வித அருகதையும் இல்லை. அமைச்சர் ரிஷாத் பதியுதீன் என்பவர் இனவாதமற்ற சிறந்த தலைவர் என்பதை வடக்கில் வாழும், தமிழர்களும், சிங்களவர்களும், முஸ்லிம்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். சர்வதேச சமூகம் இவரது பணியைப் பாராட்டியுள்ள நிலையில் வெறும் பிரபலத்துக்காக அரசியல் செய்யும் பிரபா கணேசன் போன்றவர்கள் இந்த நாட்டு அரசியலுக்குத் தகுதியற்றவர்கள் என்பதை நாம் கண்டிப்புடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு சமாதானம் ஏற்படும் வரை வடக்கில் முஸ்லிம் மக்களுக்கு ஒரு வீட்டைக்கூட எவரும் கட்டிக்கொடுக்கவில்லை. அந்தக் காலத்தில் அவர்கள் அகதிகளாக ஓலைக் கொட்டில்களிலும் முகாம்களில் வாழ்ந்து வந்தனர்.

ஆனால் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும், அரச இயந்திரமும் வடக்கில் அப்போது வாழ்ந்து வந்த தமிழ் மக்களுக்கு அந்த வீடுகளை பெற்றுக் கொடுத்தன. இதனைப் புள்ளி விவரத்துடன் விவாதிக்க எம்மால் முடியும், பொறுப்புள்ள ஒரு பிரதி அமைச்சராக இருந்தார் எனவும் இனவாதத்தை கடந்து செயற்படும் ஒருவராகத் தான் இருக்கின்றார் என தம்பட்டம் அடிக்கும் பிரபா கணேசன் வடக்கில் தமிழ் மக்களுக்குச் சமாதானத்தின் எதனை கிழித்திருக்கின்றார் எனக் கேட்க விரும்புகின்றேன்.

காலத்துக்கு காலம் புற்றீசல் போன்று முளைத்து வந்து இந்த மக்களின் உணர்வுகளை உசுப்பி அதன் மூலம் சுவாசிக்க துடிக்கும் பிரபா கணேசன் போன்ற இனவாதிகளின் பின்னால் தமிழ் பேசும் மக்கள் ஒரு போதும் செல்ல மாட்டார்கள். பொறுப்பற்ற அறிக்கை விடுவதை பிரபா கணேசன் நிறுத்தி கொள்ள வேண்டும் என எமது அமைப்பு பகிரங்கமாக வேண்டிக் கொள்ள விரும்புகின்றது.

அதேவேளை வவுனியா வர்த்தக நிலையங்களை முஸ்லிம் அமைச்சர் ஒருவரின் அதிகாரத்தால் முஸ்லிம்கள் பெற்று வருவதால் தமிழ் மக்கள் வியாபார ரீதியில் பின்னடைகின்றார் எனப் பொறுப்பற்றதும், ஆதாரமற்றதுமான உண்மைக்குப் புறம்பானக் கருத்துக்களை வெளியிட்டுள்ள பிரபா கணேசனின் இந்தச் செயலை வவுனியா நகர சபை உறுப்பினர் என்ற வகையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அத்துடன், இது போன்ற ஆதாரமற்ற கருத்துக்களை விதைத்து இனவாத சிந்தனைகளை ஏற்படுத்த வேண்டாம் என அவரிடம் கோருகிறோம் – என வவுனியா மாவட்ட இன நல்லுறவு ஒன்றியத்தின் தலைவர் அப்துல் பாரி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.


### தேர்தல் ஆணைக்குழு

**"உண்மையான சனநாயகம் வாக்குரிமையில் தங்கியுள்ளது"**
**வாக்களிப்பதற்கு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

- 2018 வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் நடவடிக்கைகளின் ஆரம்பப் பணிகள் தற்பொழுது முடிவடைந்துள்ளன.
- அதற்குரிய ஆவணங்கள் 2018 ஒகஸ்ட் மாதம் 10 தொடக்கம் செப்டம்பர் 06 ஆந் திகதி வரையில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் காட்சிப்படுத்தப்படும்
- உங்கள் பெயர் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாவெனப் பரிசீலித்துப் பார்த்து, பதிவு செய்யப்படவில்லையாயின் உரிமைக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்
- தகைமை இல்லாதவொருவர் ஏதேனும் வீடொன்றின் கீழ் பதிவு செய்யப்படுவதற்காக கணக்கெடுக்கப்பட்டிருப்பின் உங்களுக்கு ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கவும் முடியும்.

**உரிமைக் கோரிக்கை சமர்ப்பிப்பது அல்லது ஆட்சேபனை தெரிவிப்பது எவ்வாறு?**

- விண்ணப்பப் படிவங்களை மேற்குறிப்பிடப்பட்ட காட்சிப்படுத்தும் இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளவும்,தேருநர் இடாப்புகளையும் இவ்விடங்களில் பரிசீலித்துப் பார்க்கவும் முடியும்.
  - ஒவ்வொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்
  - ஒவ்வொரு பிரதேச செயலகம்
  - ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனம்
  - ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகங்கம்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக, 2018 தேருநர் இடாப்பில் தங்களது பெயர் பதிவதற்காகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலித்துப் பார்க்க முடியும். அதற்காக தங்களுடைய தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும்,மாவட்டத்தையும் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தில் உட்சேர்த்தல் அவசியமானதாகும்.

- உங்கள் விண்ணப்பப்படிவத்தை உரிய விதத்தில் பூர்த்தி செய்து 2018 செப்டம்பர் மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னதாக உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

தொலைபேசி இல. :011-2868441,42,43
மின்னஞ்சல் : info@elections.gov.lk
இணையத்தளம் : www.elections.gov.lk

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2018.08.21

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2872247 | அம்பாந்தோட்டை | 047-2256248 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு மாவட்ட | 011-2867472 | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | கிளிநொச்சி | 021-2285664 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 034-2222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | முல்லைத்தீவு | 021-2061426 | மொனராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| மாத்தறை | 041-2222305 | திருகோணமலை | 026-2222304 | | |

சரியாகப் பதிவு செய்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.

# ஜனாதிபதியாக 3 ஆவது தடவை போட்டியிட முடியாது என்று சட்டத்தில் தெளிவில்லை

## பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவிப்பு

அரசமைப்பின் 19 ஆவது திருத் தச்சட்டத்தின்படி இருதடவைகளுக்கு மேலதிகமாக ஒருவர் ஜனாதிபதியாக முடியாது எனக் கூறப்பட்டுள்ளதில் தெளிவில்லை என்றும் இதற்கு நீதி மன்றம்தான் விளக்கிக்கூறவேண்டி யுள்ளது என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாம ஹேவா தெரி வித்தார்.

இவ்வாறு இரு தடவைகளுக்கு மேலதிகமாக போட்டியிட முடியாது என்ற கட்டுப்பாடு இந்த திருத்தச் சட்ட மூலம் நிறைவேறியதன் பின்னர் பதவியில் உள்ளவர்களுக்கா அல்லது முன்னர் பதவி வகித்தவர்களுக்கும் சேர்த்தா பொருந்தும் என்பது 19 ஆவது திருத்தச் சட்டத்தில் தெளிவாக கூறப்படவில்லை எனவும் பிரதீபா மஹா நாம ஹேவா விளக்கமளித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற ஒரு புதியவாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

# நாடாளுமன்றத்தில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் சாதாரண தரத்தில் கூட சித்தியடையாதவர்களாம்!

## ஊவா மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

நாட்டை தற்போது விழுந்துள்ள பாதாளத்தில் இருந்து மீட்டெடுக்க வேண்டுமாயின் நடைமுறையில் உள்ள அரசியல் முறையை மாற்ற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊவா மாகாணசபை உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித் துள்ளார்.

இதேவேளை, நடைமுறையில் உள்ள அரசியல் முறையின் மூலம் நாட்டை மீட்டெடுக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் மதியம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே வித்தியாரத்ன இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டை விழுந்துள்ள பாதாளத்தில் இருந்து மீக்க நாட்டை நேசிக்கும் புத்திஜீவிகள் உட்பட தேசப்பற்றாளர்களை இணைத்து தேசிய அமைப்பு ஒன்றின் தலைமையில் எதிர்வரும் 2019ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசியல் முன்னணி ஒன்றை உருவாக்கப் போகிறோம்.

நாடாளுமன்றத்தில் தற்போது உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் அரைவாசிக்கும் மேற்பட்டோர் சாதாரண தரப் பரீட்சையில் கூட சித்தியடையாதவர்கள். இப்படி கல் வியறிவு இல்லாதவர்களிடம் நாட்டை ஒப்படைத்ததால் தான், நாடு வெகுவாக பாதிப் படைந்துள்ளது.

இந்த நிலைமையில் இருந்து நாட்டை மீக்க நாடாளுமன்றத்திற்கும், மாகாண சபைகளுக்கும் கல்வி கற்றவர்களையும், புத்திஜீவிகளையும் அனுப்பி வைக்க வேண்டும்.- எனவும் அவர் கூறியுள்ளார்.

# தினசரி ராசி பலன் (20.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆவணிதிங்கள் 4ஆம் நாள் திங்கட்கிழமை தசமித்திதி பி.இ.5.16 மணி வரை பின்னர் ஏகாதசி. நட்சத்திரம்: கேட்டை இரவு 9.41 வரை பின்னர் மூலம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 7.35 மணி முதல் 9.08 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 12.04 மணி முதல் 1.35 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை தசமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- கேட்டை.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். மனம் சஞ்சலமடையும். குடும்பத்தில் அமைதி குன்றும். தேக சுகம் பாதிப்படையும். வர்த்தகத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். வியாபாரம் மத்திம லாபம் காணப்படும். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வியாபாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு திறமையின் அடிப்படையில் உயர்வுகள் கிடைக்கும்.

**கடகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**சிம்மம்** சஞ்சலம். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் அமைதியின்மை காணப்படும். தேக சுகம் பாதிப்புறும். தொழிலில் கடின உழைப்பு இருக்கும். பேச்சு வார்த்தையில் நிதானம் தேவை.

**கன்னி** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் லாபம் சுமாராக கிடைக்கும்.

**துலாம்** சுபீட்சமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர் வீட்டுச் சுப நிகழ்ச்சிகளில் கலந்து தலைமை தாங்க நேரிடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**விருச்சிகம்** நன்மையான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரம் துரித வளர்ச்சி அடையும். மாணவர்கள் கல்வியில் மேம்படுவார்கள்.

**தனுசு** யோசனையான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் கவனக் குறைவு உண்டாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிக்கு ஆளாக நேரும்.

**மகரம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். தாய் வழி உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்ப உறவில் அபிவிருத்தி காணப்படும். வியாபாரம் நன்கு விருத்தியடையும். சுய தொழில் முன்னேற்ற மடையும்.

**மீனம்** இனிமையான நாள். பணவரவு அதிகரிக்கும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். வெளிநாட்டு உறவினர் வரவால் வீட்டில் களிப்பும், கலகலப்பும் அதிகரிக்கும். திருமண காரியங்கள் சுபமாய் ஒப்பேறும்.

சந்திராஷ்டம நாள்; **அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவ தைத் தவிர்க்கவும்.**

# சங்கக்காரவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த தென்னிலங்கை அரசியல்வாதிகள் தீவிர முயற்சி!



கொழும்பு, ஓக.20

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் முயற்சியில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும்தான் ஒருபோதும் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என சங்கக்கார தனது உத்தியோகபூர்வ முகப் புத்தகப் பக்கத்தில் அறிவித்திருந்தார்.

ஆனாலும் சங்கக்காரவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதில் பிரபல அரசியல்வாதிகள் சிலர் கடுமையான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக பிராந்திய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அழுத்தங்களை சங்கக்கார மீது திணிக்கும் முயற்சிகள் திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

சங்கக்காரவை ஜனாதிபதியாக்கும் முயற்சியில் பிராந்திய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூதரகங்கள் தலையிட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய சங்கக்காரவை சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி வேட்பாளராகக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என இந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆட்சியின் போதும் குமார் சங்கக்காரவை அரசியலில் ஈடுபடுத்தும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டிருந்தார். ஆனாலும் குமார் சங்கக்கார அதனை முற்றாக நிராகரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(கு)

# நஷ்டத்தில் இருந்த லங்கா சதொச இலாபமீட்டும் நிறுவனமாகியுள்ளது!

## பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.20

கடந்த ஆட்சியில் அறுபது கோடி ரூபாவுக்கும் மேலாக நஷ்டத்தில் இருந்த லங்கா சதொச நிறுவனம் கடந்த வருடம் 35 கோடி ரூபாவுக்கு மேல் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது என பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்துள்ளார்.

லங்கா சதொச நிறுவனத்தின் 401ஆவது கிளையை ஓட்டமாவடியின், மாவடிச் சேனையில் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஆட்சிக்காலத்தில் பெரும் நஷ்டத்தோடும், கடன் சுமையோடும் இயங்கிக்கொண்டிருந்த லங்கா சதொச நிறுவனத்தை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பொறுப்பெடுத்து



பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்து இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியுள்ளார்.

அரசியலுக்கு அப்பால் நாட்டிலுள்ள மக்களுக்கு நியாய பூர்வமான விலையில் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்கின்ற விடயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட கொள்கை காரணமாக கடந்த ஆட்சியில் அறுபது கோடி ரூபாவுக்கு மேலாக நஷ்டத்தில் இருந்த லங்கா சதொச நிறுவனம் கடந்த வருடம் 35 கோடி ரூபா விற்கும் மேல் இலாபமீட்டும் நிறுவனமாக ஆக்கப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கைச் சுமை குறைய வேண்டும் என்பதற்காகத் தான் இந்த பணிகளை அரசாங்கம் செய்து கொண்டு வருகின்றது. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வழிகாட்டல் நிகழ்ச்சி நிரலில் நாட்டில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசு, நாடு முழுவதும் கம்பெரலிய திட்டத்தை அறிமுகப்படுத்தி பாரிய நிதி ஒதுக்கீட்டை செய்து ஒவ்வொரு பிரதேசத்திலும் இருக்கின்ற மக்களுடைய அடிப்படை தேவைகளை நிறைவு செய்கின்ற வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

இதேபோன்று ஓட்டமாவடி பிரதேசத்தில் பாரிய மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்பதற்காக எல்லா வசதி வாய்ப்புக்களையும் உள்ளடக்கிய திருமண மண்டபம் மிக விரைவில் 15 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப் படவுள்ளது.- என அவர் தெரிவித்துள்ளார்.

(கு)

# சி.ஐ.டியினருக்கு சிற்றுண்டி: மஹிந்த வீட்டில் உபசரிப்பு!

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தி செல்லப்பட்டுதாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பெறப் பட்ட போது இரண்டு தரப்பினரும் சிறந்த புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்பட்டனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விஜயராமயவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (சி.ஐ.டி) வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சி.ஐ.டியினர் வருகை தந்த போது அவர்களுக்கு சிற்றுண்டிகளை வழங்கி உபசாரம் நடத்தப்பட்டுள்ளது எனத் தகவல் தெரிவிக்கின்றன.

அத்துடன் எவ்வித தயக்கமும் இன்றி மஹிந்த ராஜபக்ஷ, சி.ஐ.டியினரின் கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் எனவும் அவருக்குத் துணையாக அவரின் சட்டத்தரணிகளுடன் முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் இருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷவிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலத்தின் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் கீத் நோயர் தொடர்பில் மீண்டும் வாக்குமூலம் பெறப்படவுள்ளது எனத்தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனியார்துறை ஊழியர்கள் சம்பளம் அதிகரிப்பது தொடர்பில் கவனம்!

தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனத்தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சமகால கோரிக்கைகளுக்கு அமைய ஊழியர்களின் குறைந்த பட்சசம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையை பிரதிநிதித்துவப் படுத்தும் சில தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

தனியார் துறையினரின் குறைந்த பட்ச சம்பளம் 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும் என அமைச்சரிடம் 9 தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன.

சம்பள அதிகரிப்பு தொடர்பில் சில சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குறைவான வசதிகளில் அழகான முப்பரிமாண ஓவியங்களை வரைந்த இலங்கைக் கலைஞர்!



முப்பரிமாண கலை, உலகில் மிகவும் பிரபலமான கலைத்துறை ஆகும். இலங்கையில் முப்பரிமாண கலைஞர்களும் அவர்களது படைப்பாற்றலும் மிக அதிகமாக இல்லை.

அதற்குரிய வசதிளும் இங்கு குறைவாகவே காணப் படுகின்றன.

எனினும், இலங்கையைச் சேர்ந்த ஓவியர்களில் ஒருவர் குறைவான வசதிகளில் அழகான முப்பரிமாண ஓவியங்களை வரைந்துள்ளார்.

துரா சம்பத் என்ற கலைஞரே இந்த அழகான ஓவியங்களை உருவாக்கியுள்ளார்.

அந்தக் கலைஞர் உருவாக்கிய ஓவியங்கள் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடற்பரப்பில் கரையொதுங்கும் கழிவுப்பொருள்களினால் பெரும் பாதிப்பு!





இலங்கைக் கடற்பரப்பில் கரையொதுங்கும் கழிவுப் பொருள்களினால் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தியாவில் இருந்து இவ்வாறான கழிவுப்பொருள்கள் இலங்கையின் பல்வேறு கடற்பகுதிகளில் கரையொதுங்கி வருகின்றன.

தற்போது மன்னார் கடலில் கரை ஒதுங்கிய இந்த குப்பையினால் பெருமளவில் சூழல் மாசடைந்துள்ளது.

இதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்கள் உயிரிழந்துள்ளமைடன், கடல்பகுதி அசுத்தம் நிறைந்த குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது.

இது தொடர்பான படங்கள் ஊடகங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

ஏற்கனவே இந்தியாவில் வீசப்பட்ட பெருந்தொகை மருத்துவக் கழிவுப்பொருள்கள் புத்தளம் பகுதியில் கரையெதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் மா அதிபர் மீது நடவடிக்கை எடுக்க எமக்கு அதிகாரம் இல்லை

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 20

பொலிஸ்துறை தொடர்பில் தமது பரிந்துரைகளைப்பொலிஸ் மா அதிபர் நிறைவேற்றாது போனால் அவர் மீது நடவடிக்கை எடுக்கத் தமக்கு அதிகாரம் இல்லை என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் பி.எச்.மானதுங்க அண்மையில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தமது ஆணைக்குழு மேற்கொள்ளும் பரிந்துரைகளை எவருக்கும் மாற்ற முடியாது என்பது 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் கூறப்பட்டுள்ளது.

எனினும் தமது பரிந்துரைகளை பொலிஸ் மா அதிபர் நடைமுறைப்படுத்தாவிட்டால், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்ய முடியும்.

இதன் ஊடாக பொது மக்கள் பொலிஸாரிடம் இருந்துஉரியசேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.- என்று மானதுங்க தெரிவித்துள்ளார்.

# பொலிஸாரை கண்டதும் போதைப்பொருளை விழுங்கிய பெண்!

பிலியந்தலை – மிரிஸ்வத்தை பண்டாரநாயக்க வீடமைப்பு தொகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தேடுதலின் போது அதிகவலு கொண்ட மோட்டார்சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். பொலிஸ் அதிகாரிகள் பெண்ணின் வீட்டை சுற்றிவளைத்து சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

வீட்டை சுற்றி வளைத்த பொலிஸார், வீட்டின் கதவை தட்டியுள்ளனர். கதவை திறந்த பெண், பொலிஸாரை பார்த்ததும் தனது கையில் இருந்த ஹெரோயின் பக்கெற் ஒன்றை வாயில் போட்டு விழுங்கினார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சந்தேகநபர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதுடன், அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளனர்.

# ஆசிரியர்களின் சம்பளங்களை அதிகரிக்க நடவடிக்கையாம்!



கொழும்பு, ஒக. 20

பாடசாலை ஆசிரியர்களின் சம்பளங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியை கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ்காரியவசம் அண்மையில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஆசிரியர்களின் சம்பளங்கள் குறைக்கப்பட்டது. அவர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.


அத்துடன் பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டு வரும் அசிரியர்களின் கொடுப்பனவுகளை மேலும் அதிகரிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியைச் சிலர் குரோத உணர்வுடன் நோக்குகின்றனர்.

குறுகிய அரசியல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் சிலர் சேறு பூசல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.- என அவர் தெரிவித்துள்ளார்.

# மண்சரிவினால் வீடு பகுதியளவில் சேதம்!





டிக்கோயா தரவளை கொலனியில் உள்ள வீடு ஒன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் குடியிருப்பு பகுதி அளவில் சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.


ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா தரவளை கொலனி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழையால் குடியிருப்புக்கு பின்புறத்தில் இருந்த மண் மேடு ஒன்று சரிந்து வீழ்ந்ததில் பகுதி அளவில் வீடு சேதமடைந்துள்ளது என ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த குடியிருப்பின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் வீட்டின் சுவர், ஜன்னல் கதவு என்பன சேதமடைந்துள்ளன என்றும் குடியிருப்பில் இருந்தவர்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கிராம உத்தியோகத்தருக்கும் அம்பகமு பிரதேசசெயலகத்திற்கும் அறிவிக்கபட்டுள்ளது என தெரிவித்துள்ளனர் இந்த குடியிருப்பை சேர்ந்தவர்கள். பாதிக்கப்பட்டோர் உறவினர்களின் வீட்டில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir





- மு.ராஜேஷ் -

# அடுத்த ஐந்து ஆண்டுகள் கோர வெயில் கொல்லும்


விஞ்ஞானிகளின் கணிப்பு நிஜமானால் அடுத்த சில வருடங்களில் அதிக வெப்பத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம்

“ஆனால் அடுத்த 5 ஆண்டுகள் வெயில் கொல்லும்!” – என்று கூறும் விஞ்ஞானிகள் அதற்குச் சொல்லும் காரணம் என்ன?

“போன வருடத்தை விட இந்தத் தடவை வெயில் அதிகமா இருக்குற மாதிரி தெரியுதே!” – என்று கோடைக் காலங்களில் யாரேனும் ஒருவர் சொல்லியிருக்கக் கேட்டிருப்போம். உண்மையாகவே நிலைமை அப்படித்தான் இருக்கிறதா, இல்லையென்றால் நமக்கு மட்டும்தான் அப்படித் தோன்றுகின்றதா என்று பலர் யோசித்திருக்கலாம். நீங்கள் அப்படியெல்லாம் யோசிக்கவே வேண்டாம். நிஜமாகவே கடந்த நான்கு வருடங்களில் வெப்ப நிலை அதிகரித்திருப்பது உண்மைதான் எனக் கூறும் விஞ்ஞானிகள், நிலைமை இன்னும் மோசமாகக் கூடும் என எச்சரித்திருக்கிறார்கள்.

புவி வெப்பமயமாதல் என்ற விடயம் பல வருடங்களாக வெறும் விவாதப் பொருளாக மட்டுமே இருந்து வந்தது. அதனால் ஏற்படும் எதிர்கால விளைவுகளைப் பற்றி நீண்ட காலமாகவே எச்சரிக்கை செய்து வந்தார்கள் விஞ்ஞானிகள். ஆனால், மனிதர்கள் அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்வது





போலவே தெரியவில்லை. வழக்கம் போல தங்கள் இஷ்டப்படியே செய்து வந்தார்கள். பூமி இத்தனை வருடங்களாக வெப்பநிலையைச் சமநிலையில் வைப்பதற்கு என்ன காரணிகளையெல்லாம் வைத்திருந்ததோ அதையெல்லாம் யோசிக்காமல் அழித்து வந் தார்கள் மனிதர்கள். இவ்வளவு காலமும் பொறுத்துக்கொண்டிருந்த பூமி இப்போது அதன் விளைவை நமக்கு திருப்பித் தரத் தொடங் கியிருக்கிறது. அதன் ஒரு பகுதி தான் வழக்கத்தை விடவும் அதிகமான வெப் பத்தை உணர்வது.

அடுத்த ஐந்து வருடங்களில் நிலைமை இன்னும் மோசமாகலாம்.

இதுவரை பதிவு செய்யப்பட்டிருந்த வரலாற்றிலேயே கடந்த நான்கு வருடங்களில்தான் உலகம் முழுவதிலும் அதிகமான வெப்பநிலை நிலவியது என்று விஞ்ஞானிகள் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்கள். அதிலும் குறிப்பாக 2016 ஆம் ஆண்டே வழக்கத்துக்கு மாறாக அதிக வெப்பம் பதிவாகியிருக்கிறது.

“அடுத்த ஐந்து வருடங்களில் அதிகமான வெப்பத்தை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நாங்கள் கண்டறிந்திருக்கிறோம்’’– என்கிறார் பிரான்ஸின் தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஃப்ளோரியன் செவேலெக் (Florian Sevellec). இவரும் இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தைச்



சேர்ந்த விஞ்ஞானி ஒருவரும் இணைந்து ஆய்வுக்கட்டுரை ஒன்றை நேச்சர் (Nature) என்ற அறிவியல் இதழில் சமர்ப்பித்திருக்கி றார்கள்.

அதில் தான் இந்தத் தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

புவி வெப்பமயமாதல் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டே இருந்த வேளையில் 2000ஆவது ஆண்டு தொடங்கி சில வருடங்கள் அதன் வேகம் சற்று குறைந்தது. அதற்குக் காரணமாக இருந்தது சில உள் காரணிகள் தாம். குறிப்பாகப் பூமியில் உள்ள பெருங்கடல்களில் நடைபெற்ற ஏற்றத்தாழ்வுகள் அதற்கு முக்கியக் காரணமாக இருந்தன. இது போன்ற உள் காரணிகள் பூமியின் வெப்பத்தைக் குறைக்க உதவின. இதற்கு முன்பு எது வெப்பத்தைக் குறைக்க உதவியதோ அதுவே தற்பொழுது வெப்பம் அதிகரிப்பதற்கு காரணமாகப் போகிறது என்பது அதிர்ச்சியளிக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்த ஆய்வின்போது ஏற்கெனவே இருக்கும் பத்துக்கும் மேற்பட்ட கால நிலை தரவுகளை ஆராய்ந்திருக்கிறார்கள். அதன்படி வரும் இந்த



ஆண்டு தொடங்கி வரும் 2022ஆம் ஆண்டு வரை அதிக வெப்பம் நிலவ வாய்ப் புள்ளது. 58 சதவிகிதம் பூமியின் ஒட்டு மொத்த வெப்பநிலை அதிகரிப்பதற்கும் 69 சதவிகிதம் கடல்களின் வெப்பநிலை அதிகரிப்பதற்கும் வாய்ப் புள்ளதாக தெரிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் இது தரவுகளின்படி கணிக்கப்பட்ட ஒன்று என்பதால் இதற்கு முழுமையான உத்தரவாதத்தை அளிக்க முடியாது என்பதையும் குறிப்பிட் டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர்களின் கருத்துக்கு மாறாக இது நிகழ்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவானது என்று தெரிவித்திருக்கிறார் நாசாவைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர். அப்படியே நிகழ்ந்தாலும் பெரிதாக ஒன்றும் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் – அவர் தெரிவித்திருக்கிறார். *

> **“பூமி இத்தனை வருடங்களாக வெப்பநிலையைச் சமநிலையில் வைப்பதற்கு என்ன காரணிகளையெல்லாம் வைத்திருந்ததோ அதையெல்லாம் யோசிக்காமல் அழித்து வந்தார்கள் மனிதர்கள். இவ்வளவு காலமும் பொறுத்துக் கொண்டிருந்த பூமி இப்போது அதன் விளைவை நமக்கு திருப்பித் தரத் தொடங்கியிருக்கிறது. அதன் ஒரு பகுதி தான் வழக்கத்தை விடவும் அதிகமான வெப்பத்தை உணர்வது.”**

---









இந்தியா பிரிட்ஜ் நுண்கலை கல்வி நிறுவனம் இந்தியா தஞ்சாவூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இலங்கையில் நுண்கலை ஆசிரியர்கள் உயர்கல்வி கல்வியை கற்பதற்கான செயற்றிட்டத்தை இங்கு முன்னெடுக்கின்றது. அதன் அங்குரார்ப்பண நிகழ்வு வெள்ளவத்தை சபையர் ஹோட்டலில் கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமானவே.இராதாகி ருஷ்ணனினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கபட்டது.இந் நிகழ்வில் இந்திய அதிதிகளும் கலந்துக் கொண்டனர்.

**பா.திருஞானம்**

---



வலி.தெற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட மயானங்களுக்கான முதற் கட்ட சிரமதானப் பணி நேற்று உடுவில் மல்வம் பகுதியில் நடை பெற்றது.

தவிசாளர் உட்பட சகல உறுப்பினர்களும் இந்தப் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

அதேவேளை இந்தச் சிரமதான பணிகளில் கிராமசேவையாளர், மதகுருமார்கள்,சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து ஒத்துழைப்பு வழங்கினர்.

காலைக்கதிர் Kalaikkathir



# நியூட்டனுக்கும் டார்வினுக்கும் இடையில் ஸ்டீபன் ஹோக்கிங்!

## வெஸ்ட்மினிஸ்டர் அபே கல்லறையில் அறிவியலாளர்கள் மத்தியில் நல்லடக்கம்

- சா.ஜெ.முகில் தங்கம் -

வெஸ்ட்மின்ஸ்டர் அபே என்பது லண்டனில் இருக்கக் கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலயங்களுள் ஒன்று.

“நம்முடைய பேராசையினாலும், முட்டாள்தனத்தாலும் இந்தப் பூமியைப் பெருமளவு சேதப்படுத்திவருகிறோம். இந்த பூமி 100 ஆண்டுகளுக்கு மேல் நிச்சயம் தாங்காது. மாற்றுக் கிரகத்தைத் தேடி மனித இனம் நகரவேண்டிய காலகட்டம் இது. மரணம் என்னை ஒவ்வொரு நொடியும் துரத்திக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நொடியையும் ரசித்து, பெரும் ஈடுபாட்டோடு மனித இனத் தொடர்ச்சிக்காகப் போராடிக்கொண்டிருக்கிறேன். வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது... நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன் மூலம் மனித இனம் தொடர வழிவகுப்பேன்.” – இந்தச் சொற்கள் உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இந்தச் சொற்களை உதிர்த்தது நிஜமான குரல்கூட அல்ல. ‘ஈக்வலைஸர்’ என்ற கம்ப்யூட்டர் புரோக்ராம் உதவியோடு பல வருடங்களாக எலக்ட் ரானிக் குரல் மூலம் பேசி வந்த இயற்பியல் அறிவியலாளரான ஸ்டீபன் ஹோக்கிங்கின் வார்த்தைகள்தாம் இவை.

உலகின் தலைசிறந்த அறிவியலாளர்களில் ஒருவராக அறியப்படும் ஸ்டீபன் ஹோக்கிங் வாழ்நாள் முழுவதும் போராடியே பல்வேறு ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டவர். 1942 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி பிறந்த ஹோக்கிங் இளமைப் பருவத்திலேயே ALS எனப்படும் "Amyotrophic Lateral Sclerosis' என்ற குறைபாட்டு நோயால் பாதிக்கப்படுகிறார். கொஞ்சம் கொஞ்சமாக அவரின் உடல் உறுப்புகள் செயலிழக்கத் தொடங்கின. செயலிழக்கும் உறுப்புகளுக்கு ஈடான கருவிகளைத்தானே உருவாக்கி அவற்றை ஈடு செய்தார். இப்படி வாழ்நாள் முழுவதும் அறிவியல் துணை கொண்டே தனது அன்றாட வாழ்க்கையை வடிவமைத்துக் கொண்டவர், கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி இயற்கை எய்தினார். ALS நோய் பாதிக்கப்பட்டு உடலுறுப்புகள் செயலிழந்த தருணம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ முடியாது எனக் கூறியமையை முறியடித்து 40 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தவர், இப்போது லண்டனின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெஸ்ட் மின்ஸ்டர் அபே (Westminster Abbey) எனும் கல்லறையில் உறங்கிக் கொண்டிருக்கிறார்.

காலம் கடந்து பயணிப்பது குறித்த இவரது ஆய்வுகள், காலத்தைப் புரிந்து கொள்ளும் விதமாகக் காலத்தின் சுருக்கமான வரலாறு (A Brief History of Time) எனும் புத்தகமாக விரிந்தது. மனித இனத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்காகப் பல்வேறு ஆய்வுகள் செய்தவர் ஸ்டீபன் ஹோக்கிங். மனிதர்களின் அறி வியல் வரலாற்றையே புரட்டிப் போட்ட இரு பெரும் அறிவியலாளர்களுக்கு இடையில்தான் ஹோக்கிங்கின் சாம்பல் புதைக்கப்பட்டுள்ளது. உலகம் இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பவற்றில் ஒன்றான புவி ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்த நவீன இயற்பியலின் தந்தை சேர் ஐசக் நியூட்டனுக்கும், குரங்குகள்தாம் மனிதர்களின் மூதாதையர்கள் என மனிதர்கள் உருவான உண்மையைச் சொன்ன சார்லஸ் டார்வினுக்கும் இடையில்தான் ஹோக்கிங்கின் சாம்பல் கிடத்தப்பட்டிருக்கிறது. கடந்த ஜூன் மாதம் அவரது சாம்பல் வெஸ்ட்மின்ஸ்டரில் புதைக்கப்பட்டது.


வெஸ்ட்மின்ஸ்டர் அபே என்பது லண்டனில் இருக்கக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலயங்களுள் ஒன்று. ‘டாவின்ஸி கோட்’ படம் பார்த்தவர்களுக்கு இந்த வெஸ்ட் மின்ஸ்டர் அபே நன்றாகத் தெரியும். நியூட்டனின் கல்லறைதான் ஒரு புதிரை விடுவிக்கும் விடயமாக வரும். லண்டனின் மிகப் பிரமாண்டமான கிறிஸ்தவப் பேராலயமான வெஸ்ட் மின்ஸ்டர் சேர்ச்சுடன் இணைந்த கல்லறைப் பகுதியே வெஸ்ட் மின்ஸ்டர் அபே. இங்கு சாதாரண ஆள்களை அடக்கம் செய்ய முடியாது. ஒருவரது அடக்க நிகழ்வில் கலந்துகொள்வதற்குக்கூட 1000 பேருக்கு மட்டுமே அனுமதி தரப்படும். அரசக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், பிரபுக்கள், புகழ்பெற்ற கவிஞர்கள், அறிவியலாளர் கள் மற்றும் புகழ் வாய்ந்த மனிதர்கள் போன்றவர்களுக்கு மட்டுமே இந்தக் கல்லறையில் இடம் உண்டு.1000 வருடங்களுக்கு மேலாகக் கம்பீரமாக நிற்கிறது வெஸ்ட் மின்ஸ்டர் ஆலயமும் கல்லறையும். இதுவரை 3300 பிரபலங்கள் இங்கே புதைக்கப்பட்டுள்ளனர்.

கிபி 960ஆம் ஆண்டு லண்டனின் தேம்ஸ் ஆற்றங்கரையில் வெஸ்ட் மின்ஸ்டர் தேவாலயம் நிறுவப்பட்டது. ஒவ்வொரு மன்னரது ஆட்சிக்காலத்திலும் விரிவாக்கம் செய்யப்பட்ட ஆலயம். கிபி 1200 களில் ஆண்ட மூன்றாம் ஹென்றி காலத்தில்தான் இப்போதிருக்கும் வெஸ்ட்மின்ஸ்டர் அபே முழு அளவில் கட்டப்பட்டது. அப்போதிருந்து இப்போது வரை அரசக் குடும்பங்களின் திருமணங்கள், மற்ற நிகழ்ச்சிகள் என அனைத்தும் இந்த தேவாலயத் தில்தான் நடக்கின்றன. சார்லஸ் – டயனா திருமணம் உட்பட 17 அரச திருமணங்கள் இங்கு நிகழ்ந்துள்ளன.


சேர் ஐசக் நியூட்டனின் உடலானது கிபி 1727 ஆம் ஆண்டும் சார்லஸ் டார்வின் உடலானது 1882ஆம் ஆண்டும் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் புதைக்கப்பட்டன. 1937இல் இயற்பியலாளர் எர்னெஸ்ட் ரூதர்போர்டு, 1940இல் ஜெ.ஜெ.தாம்சன் ஆகியோரும் இங்கு நல்லடக்கம் செய்யப்பட்டனர். அதன் பிறகு வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நல்லடக்கம் செய்யப்பட்ட அறிவியலாளர் ஸ்டீபன் ஹோக்கிங்தான். 78 ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் அறிவியலாளர் வெஸ்ட்மின்ஸ்டரில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் அரச குடும்பங்கள், பிரபுக்கள், எழுத்தாளர்களுக்கு என தனித்தனியாக கல்லறைகள் பிரிக்கப்பட்டுள்ளன. எழுத்தாளர்களுக்கு அருகில் உள்ள அறிவியலாளர்களுக்கான இடத்தில்தான் மேற்சொன்ன அனைத்து அறிவியலாளர்களும் நல்லடக்கம் செயப்பட்டுள்ளனர்.

மனம் கவர்ந்த ஒரு பௌதிக விஞ்ஞானி, எழுத்தாளர், போராட்டத்தையே வாழ்க்கையாகக் கொண்டவர், முயற்சிக்கு முன் உதாரணமானவர் ஸ்டிபன் ஹோக்கிங். இவரது எளிமையான வாழ்வும் விஞ்ஞான நிலைமாற்றத்தை ஏற்படுத்திய கண்டுபிடிப்பாகும்.

ஜூன் மாதம் நடைபெற்ற ஸ்டீபன் ஹாக்கிங்கின் நல்லடக்கத்தில் கலந்து கொள்வதற்காக 27,000 பேர் விண்ணப்பித்திருந்தார்கள். அதில் 1000 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.பள்ளிக் குழந்தைகள், கல்லூரி மாணவர்கள், அறிவியல் ஆர்வம் உள்ளவர்கள் எனப் பலதரப்பினரும் அந்த 1000 பேரில் இருந்தனர். ஸ்டீபன் ஹோக்கிங்கிற்கு சொர்க்க, நகரங்களில் நம்பிக்கை இருந்ததில்லை. தனது வாழ்நாள் முழுவதும் கடவுள் நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்த ஸ்டீபன் ஹோக்கிங் நல்லடக்கம் கிறிஸ்தவ முறைப்படி நடந்தது. ✻







சேர் ஐசக் நியூட்டனின் உடலானது கிபி 1727 ஆம் ஆண்டும் சார்லஸ் டார்வின் உடலானது 1882ஆம் ஆண்டும் வெஸ்ட் மின்ஸ்டர் அபேயில் புதைக்கப்பட்டன. 1937இல் இயற்பியலாளர் எர்னெஸ்ட் ரூதர்போர்டு, 1940இல் ஜெ.ஜெ.தாம்சன் ஆகியோரும் இங்கு நல்லடக்கம் செய்யப்பட்டனர். அதன் பிறகு வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நல்லடக்கம் செய்யப்பட்ட அறிவியலாளர் ஸ்டீபன் ஹோக்கிங்தான்.



காலைக்கதிர் Kalaikkathir




# இளமையை பேணுவதற்கு ஒலிவ் ஒயில் மசாஜ்...!

ஒலிவ் ஒயிலை தினமும் இரவில் படுக்கும் முன், முகத்தில் தடவி நன்கு மசாஜ் செய்து, மறுநாள் காலையில் முகத்தைக் கழுவினால், ஏராளமான நன்மைகளைப் பெறலாம்.

சரும வறட்சி, முதுமையை தடுக்கும் ஒலிவ் ஒயில்.

ஒலிவ் எண்ணெயில் விற்றமின்கள், கனிமச்சத்துக்கள் மற்றும் இயற்கை அமிலங்கள் அடங்கியுள்ளன. இந்த எண்ணெய் அனைத்து வகையான சருமத்தினருக்கும் ஏற்ற ஒன்று. இதில் 'ஆன்டி – ஆக்ஸிடன்ட்' பொருள் ஏராளமாக இருப்பதால்தான், இது சருமப் பராமரிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய ஒலிவ் ஒயிலை தினமும் இரவில் படுக்கும் முன், முகத்தில் தடவி நன்கு மசாஜ் செய்து, மறுநாள் காலையில் முகத்தைக் கழுவினால், ஏராளமான நன்மைகளைப் பெறலாம்.

ஒலிவ் ஒயிலில் சருமத்தின் ஆரோக்கியத்திற்கு தேவையான விற்றமின் ஈ மற்றும் ஏ ஏராளமாக நிறைந்துள்ளது. எனவே தினமும் இரவில் ஒலிவ் ஒயில் கொண்டு முகத்தை மசாஜ் செய்து வந்தால், பாதிக்கப்பட்ட சரும செல்கள் புதுப்பிக்கப்பட்டு, முகம் புத்துணர்ச்சியுடன் அழகாகக் காணப்படும்.

முகத்தில் ஏதேனும் தழும்புகள் இருந்தால் தினமும் இரவில் ஒலிவ் ஒயிலைக் கொண்டு மசாஜ் செய்து வாருங்கள். இதனால் அவ்விடத்தில் புதிய செல்கள் புதுப்பிக்கப்பட்டு, சருமத்தின் நெகிழ்வுத்தன்மை அதிகரிக்கும். மேலும் இச்செயல் மூலம் நாளடைவில் தழும்புகளும் மறையும்.

தினமும் ஒலிவ் ஒயில் கொண்டு மசாஜ் செய்வதால், அதில் உள்ள விற்றமின் ஈ, சரும கலங்கள் சீரழிவடைவதைத் தடுத்து, சருமம் விரைவில் முதுமைத் தோற்றம் அடைவதைத் தடுக்கும். மேலும் ஒலிவ் ஒயிலில் உள்ள ஸ்குவாலின் அமிலம், சருமத்தின் நெகிழ்வுத்தன்மையை அதிகரித்து, சருமம் தளர்வதைத் தடுத்து, இளமையுடன் வைத்துக் கொள்ள உதவும்.

உங்களுக்கு மிகுந்த வறட்சியான சருமம் என்றால், ஒலிவ் ஒயிலைக் கொண்டு தினமும் இரவில் சருமத்தை மசாஜ் செய்து வாருங்கள். இப்படித் தினமும் செய்வதன் மூலம், சரும வறட்சி ஏற்படுவதைத் தடுக்கலாம்.


# நோய்களிலிருந்து விடுதலை தரும் வாத நாசக முத்திரை

காதுவலி, தலை வலி, தலை சுற்றல், மூட்டுவலி போன்ற பல்வேறு நோய்களில் இருந்து நிவாரணம் தருகிறதாம் வாத நாசக முத்திரை எனற யோக சன முறை. இந்த முத்திரை செய்முறையைப் பார்க்கலாம்.

வாத நாடி கூடினால் சந்திவாதம், கீல் வாதம், முடக்கு வாதம் என 21 வகையான வாத நோய்கள் உண்டாகும். மேலும், காதுவலி, தலைவலி, தலைசுற்றல், சக்தியின்மை, பொறுமையின்மை, சுறுசுறுப்பின்மை, குறைவான நினைவாற்றல், தூக்கமின்மை, இரத்த ஓட்ட குறைவால் உடலில் மத மதப்பு ஏற்படுதல், மூட்டு வலிகள் (ஒஸ்டியோ ஆர்த்ரைடீஸ்), தலைமுடி, நகம், கால் பாதங்களில் வெடிப்பு ஏற்படுதல், பிறப்புகளிலிருந்து வாயு பிரிதல், ஏப்பம் போன்ற நிறைய நோய் குறிகள் தோன்றும், அவற்றில் இருந்து நிவாரணம் தருவது இந்த முத்திரை.



ஆள்காட்டிவிரல், நடுவிரலை மடக்கி உள்ளங்கையில் வைத்து அதன் மீது கட்டைவிரலால் அழுத்தி பிடிக்கவும். மற்றவிரல்கள் நீட்டிய படி இருக்கட்டும். இதுவே வாத நாசக முத்திரை. காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை இந்த முத்திரையை எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். மிகுந்த பலனளிக்கும். 30 வினாடியிலிருந்த 15 நிமிடம் வரை செய்வது உத்தம பலன் கொடுக்கும்.



பிரேஸில் நாட்டின் தென்பகுதியில் காணப்படும் இந்தவகை தவளைகள் தான் உலகிலே மிகசிறிய தவளை இனமாகும். Izecksonh's Toa என்றும் இவை அழைக்கப்படும். இவை சுமார் 9.8 mm நீளமும் உடையது. இதுகூட 1 cm விட சிறியதுதான்.

# பானங்களை 'ஸ்ட்ரோ' மூலம் பருகுவதால் வரும் பாதிப்பு



பிளாஸ்டிக் 'ஸ்ட்ரோ' பயன்படுத்துவதால் நம் உடலுக்கு ப் பல கெடுதல்கள் ஏற்படுவதாக கூறப்படுகிறது. அவை வருமாறு:-

**பல் பிரச்சினை**

ஸ்ட்ரோ மூலம் பானங்களை குடிப்பதால், ஸ்ட்ரா குழாய் போல செயல்படுகிறது. இது பற்களின் எனாமலில் நாளடைவில் சிக்கலை ஏற்படுத்தும்.

**வாயு, வீக்கம்**

ஸ்ட்ரோ பயன்படுத்துவதால், அதன் வழியாக காற்று செரிமான பாதைக்குள் செல்லும், இதனால் வாயு மற்றும் வீக்கத்தை ஏற்படுத்தும்.

**அளவு தெரியாது**

ஸ்ட்ரோமூலம் பருகுவதால், நமக்கு தேவையான அளவு தெரியாமல் அதிகமாக பருகும் நிலை ஏற்படுவதாக வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

**ரசாயனங்கள்:**

பாலிபுரோபிலின் எனும் ரசாயனத்தால் தயாரிக்கப்பட்ட ஸ்ட்ரோ மூலம் பானங்களை பருகுவதால், அந்த ரசாயனங்கள் உடலுக்கு செல்ல வாய்ப்பு உள்ளது.

**சுருக்கம்:**

சிகரெட்டை 'பைப்' மூலம் பிடிப்பதால் ஏற்படும் கேடுகளைப்போல நீண்ட நாள்கள் ஸ்ட்ரோ மூலம் பானங்களை பருகுவதால் சுருக்கங்கள் ஏற்படும்.

# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுகள்...



பருவ மழைக்காலங்களில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவு பழக்கங்களைக் கைக்கொள்ளுதல் நலம்.

பருவமழைக்காலங்களின்போது நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்திகள் குறைந்து காணப்படும். அதை உணவு பழக்கங்கள் மூலம் சீராக வைத்துக்கொள்ள முடியும். அது குறித்த விவரங்களை பார்க்கலாம்.

**இஞ்சி**

ஆதிகாலத்திலிருந்தே இஞ்சி மருந்தாக பயன்பட்டு வருகிறது. குறிப்பாக தொடர் இருமல் மற்றும் நெஞ்சு சளிக்கு இது சிறப்பாகப் பயன் தரும். இஞ்சி உடன் தேன் கலந்து சாப்பிட்டால் நோய் பரபரப்பும் கிருமிகளை அது உடனே அழித்து விடும்.

**மஞ்சள்**

நம்மவர்களின் முக்கிய சொத்து என்றால் வேம்பும் மஞ்சளும் என்று சொல்லலாம். மஞ்சள் பருவ மழை காலங்களில் உகந்த உணவுச் சேர்க்கையாகும். உடல் உபாதைகளுக்கு மட்டுமின்றி, நோய்த் தொற்றும் இதனால் ஏற்படாது.

**பச்சிலைத் தேநீர்**

கிரீன் டீ குடிப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் மற்றும் உடலில் புத்துணர்ச்சி தோன்றும். இதில் இரும்பு, கல்சியம், விற்றமின் சி மற்றும் விற்றமின் ஏ போன்ற சத்துகள் அடங்கியுள்ளன. மேலும் தொடர்ந்து கிரீன் டீ குடிப்பதால் நோய்க் கிருமிகள் உருவகாமல் இருக்கும்.

**பழங்கள்**


ஓரேஞ்சு, எலுமிச்சை பழம், அன்னாசிப்பழம் போன்ற சிட்ரஸ் அமிலம் நிறைந்த பழங்களில் விற்றமின் சி அதிகம் உள்ளது. இதை சாப்பிட்டு வருவதால், பருவமழை காலங்களில் ஏற்படும் நோய்த் தொற்றைத் தடுக்கலாம்.

**துளசி**

துளசியில் பூஞ்சை நோய்த்தொற்றுகள் மற்றும் பாக்டீரியாவில் ஏற்படும் நோய் ஆகியவற்றை தடுக்கும் சத்துக்கள் உள்ளன. காலையில் சூடான நீரில் துளசி போட்டு குடித்து வந்தால் உடலின் பாதுகாப்பு அமைப்புகள் உருவாகி, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

**அமுக்கிரா / அஸ்வகந்தம்**

இது மனிதனின் நினைவாற்றல் சக்திப் புத்திக்கூர்மை போன்றவற்றை அதிகரிக்க உதவுகிறது. இந்த மூலிகை நமது உடலில் ஆற்றலை அதிகரித்து, திண்மையைக் கூட்டுகிறது. இதை நாம் அவ்வப்போது உட்கொண்டு வருவதால் மனஅழுத்தமும் குறையும்.



வண்டு நகருது..
தேனி பறக்குது..
பூக்கள் சிரிக்குது
எது எது எத்தனை
இருக்கு?
கண்டு பிடியுங்கள்!!

## விடுகதைகளும் விடைகளும்

* கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது. அது என்ன?
நிழல்

*முதுகிலேசுமைதூக்கி முனகாமல் அசைந்து வரும். அது என்ன?
நத்தை

* வயதான பலருக்கு புதிதாக ஒரு கை. அது என்ன?
வழுக்கை

# சுவிஸ்குமார் தப்பிக்க உதவிய வழக்கில் திருப்பம்; ஊடகவியலாளரை விசாரணைக்கு அழைத்தது சி.ஐ.டி.

யாழ்ப்பாணம் ஓக 20

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரி யான சுவிஸ் குமாரை விடுவித்து உதவினார்கள் எனப் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணைகள் முற்றுப்பெற்று மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக அறிக்கை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ். ஊடகவியலாளர் ஒருவர் விசாரணைக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

சுவிஸ்குமார் தப்பிக்க உதவி னார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதி பர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் சப் இன்ஸ்பெக்டர் சிறிகஜன் ஆகிய பொலிஸ் அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல் தொடர் பான அறிக்கையின் பிரகாரம் யாழ். தனியார் தொலைக்காட்சியின் அலுவலகச் செய்தியாளரான நடராஜா குகராஜா என்பவரே இவ்வாறு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்தவழக்கில்சிரேஷ்டபிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ. ஜெயசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து பின் னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். சப் இன்ஸ்பெக்டர் சிறி கஜன் தலைமறைவாகி உள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜூட்சன் முன்னிலையில் கடந்த ஜுன் 20ஆம் திகதி விசாரணைக்கு வந்தது.

இதன்போது, வழக்குத் தொடு நர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி, இந்த வழக்கின் விசாரணைகள் முற்றுப் பெற்று வழக்கின் கோவை தற்போது சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது என மன் றில் தெரிவித்தார்.

இதையடுத்து இந்த வழக்கு வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதிவரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றால் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் ஊடகவியலாளர் நடராஜா குகராஜா என்பவரை விசாரணைக்கு வருமாறு கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைப்பு அனுப்பியுள்ளனர்.

கொழும்பு-01இல் அமைந்துள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஊடகவியலாளரைச் சமுகமளிக்குமாறு அந்த அழைப்பில் கோரப்பட்டுள்ளது. (ஐ)

# வீடொன்றின் மீது முறிந்து விழுந்த மரம்: அகற்றப்படவில்லை என மக்கள் விசனம்!



நாவலப்பிட்டி - கொலப்பத்தனை பகுதியில் லயன் குடியிருப்பு வீடொன்றின் மீது முறிந்து விழுந்த மரம் தற்போது வரையில் அகற்றப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 17ஆம் திகதி பலத்த காற்று வீசியதால் நாவலப்பிட்டி - கொலப்பத்தனை பகுதியில் 6 ஆம் இலக்க லயன் குடியிருப்பிலுள்ள வீடொன்றின் மீது பழமை வாய்ந்த பாரிய மரமொன்று முறிந்து விழுந்துள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக வீட்டின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்ததுடன், வீட்டிலிருந்த சில பொருள்கள் சேதமாகி யிருந்தன.

அத்துடன் அந்த வீட்டிற்கு மின் இணைப்பும் தடைப்பட்ட நிலையில், வீட்டில் வசித்தவர்கள், உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாகத் தங்க வைக்கப் பட்டனர்.

எனினும் தற்போது வரையில் முறிந்து விழுந்த மரம் அப்புறப்படுத்தப்படவில்லை என இந்த வீட்டை சேர்ந்தவர்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை உரிய அதிகாரிகள் விரைவில் மரத்தை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

மேலும், ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் Windy corner பகுதியில் நேற்று காலை மண்சரிவு ஏற்பட்டுள்ள து எனத் தெரிவிக்கப்படுகிறது.


இந்த இடத்தில் தொடர்ந்தும் மண்சரிவுஏற்படக்கூடியவாய்ப்புகள்இருப்பதால் வாகன சாரதிகளை அவதானமாகச்செயற்படுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மருந்துகளின் விலையைக் குறைக்கும் வர்த்தமானி இரு வாரங்களில்!

கொழும்பு, ஓக. 20

புற்று நோய்க்கான மருந்துகள் உட்பட இதர மருந்துகள் மற்றும் 25 உபகரணங்கள் என்பவற்றுக்கான விலையைக் குறைக்கும் வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் இரு வாரங்களுக்குள் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## புலிகளுக்கு இடையில் மோதல்: 15 வயதான ஆண் புலி உயிரிழப்பு!



சிங்கராஜ வனத்திற்குச் சொந்தமான கலவான காட்டில் இரண்டு புலிகள் கடுமையாக மோதிக் கொண்டுள்ளன.

இதன் காரணமாக ஒரு புலி உயிரிழந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. 15 வயதான ஆண் புலி ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

மோதலில் உயிரிழந்த புலியின் உடலை வன விலங்கு அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

புலியின் சடலம் நீதிமன்ற நடவடிக்கைக்காக இரத்தினபுரி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளது என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 23 வருடங்களின் பின்னர் இலங்கையில் தாயைக் கண்டுபிடித்த பிரிட்டிஷ் யுவதி

பிரிட்டனில் வாழும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட யுவதி ஒருவர் 26 வருடங்களின் பின்னர், அவரின் சொந்தத் தாயை கண்டுபிடித்துள்ளார்.

26 வயதான ரியா ஸ்லோன் என்பவர் மூன்று வார குழந்தையாக இருந்த போது ஸ்கொட்லாந்து நாட்டு தம்பதியரினால் தத்தெடுக்கப்பட்டார்.

எனினும் 26 வருடங்களின் பின்னர் அவர் தனது சொந்தத் தாயை தேடிக் கண்டுபிடித்துள்ளார்.

ஐரோப்பாவில் வாழும் இரு பிள்ளைகள் தங்கள் தாயை கண்டுபிடிக்க இலங்கை வருகின்றனர் என பி.பி.சி. செய்தி வெளியிட்டிருந்தது. அதற்கமைய அந்த இருவரில் ஒருவரான ரியா தனது தாயைக் கண்டுபிடித்துள்ளார் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

ரியா தனது குழந்தை பருவத்தை மகிழ்ச்சியாக அனுபவித்துள்ளார். இந் நிலையில் தனது பூர்வீகப் குடும்பம் தொடர்பான தகவல் அறிந்து அவர்களைக் கண்டுபிடிக்கத் திட்டமிட்டார்.

சிறு வயதில் தனது குடும்பம் தொடர்பான தேடுதல் குறித்து ஒரு போதும் தான் சிந்தித்ததில்லை என ரியா குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரு நாடுகளுக்கும் இடையில் சிக்கி இருப்பதை நான் சமீபத்தில் தான் உணர்ந்தேன், இரண்டு வேறுபட்ட அடையாளங்களைப் போல எனக்கு தோன்றியது என ரியா குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தன்னைப் பெற்ற தாயை கண்டுபிடிக்க வேண்டும் என விருப்பம் ஏற்பட்டுள்ளது என அவர் கூறியுள்ளார். தனது தாய் உயிரோடு உள்ளாரா? என்னைப் பற்றிய நினைவுகள் உள்ளனவா? என்பதனை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையே எனக்கு அதிகமாக இருந்தது.




அதற்கமைய ரியா தனது தாய் சுமித்ராவை கண்டுபிடித்தார். தனது தாய்க்கு ஏற்பட்ட வறுமை மற்றும் தனது காதலனை விட்டு பிரிந்து விட வேண்டிய நிலை ஏற்படும் என்பதன் காரணமாக சிசுவைத் தத்துக் கொடுத்துள்ளார்.

தனது பிள்ளைக்கு உணவு வழங்குவதற்கு கூட வசதி இல்லாத நிலையில் அவரது தாய் காணப்பட்டுள்ளார். இதனால் அவர் குழந்தையை தத்துக் கொடுப்பதற்கு பலவந்தப்படுத்தப்பட்டுள்ளார்.

இலங்கையின் லுலேமுல்ல, தொடங்கொட பிரதேசத்தில் வைத்தே அவர் தனது தாயைக் கண்டுபிடித்துள்ளார். தாயை மாத்திரம் அல்ல குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களையும் ரியா சந்தித்தார். தன்னையும் இன்னமும் குடும்பத்தினர் நினைவில் வைத்துள்ளனர், தனக்கு இது மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது என்கிறார் அவர்.

எப்படியிருப்பினும் தான் வளர்ந்த நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பதனை உணர்ந்து மீண்டும் ஸ்கொட்லாந்துக்கு சென்றுள்ளார்.

எனினும் தற்போது தான் இரு நாடுகளுக்கு இடையில் சிக்கியிருப்பதனை போன்ற உணர்வில் இருந்து வெளியே வந்துள்ளார் என ரியா குறிப்பிட்டுள்ளார்.

## 1048 சுற்றிவளைப்புக்கள் மூலம் ரூ.3 கோடி 50 லட்சம் வருமானம்

**வனப் பாதுகாப்புத் திணைக்களம்**

கொழும்பு, ஓக. 20

வனப் பாதுகாப்பு சட்டங்களை மீறியவர்களைப் பிடிபதற்காக கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 3 கோடியே 50 லட்சம் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது என வனப் பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வனப் பாதுகாப்புச் சட்டங்களை மீறியவர்களிடம் பெறப்பட்ட தண்டப் பணமே இந்த வருமானம் எனவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடத்தில் 1048 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிகமான சுற்றிவளைப்புக்கள் பொலன்னறுவைப் பிரதேசத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பொலிதீன் உற்பத்தியை தடுக்க பொலிஸாரின் உதவி நடப்படுகிறது

தடை செய்யப்பட்ட பொலிதீன் உற்பத்தி செய்யப்படுவதையும், விற்பனை செய்யப்படுவதையும் தடுக்கும் வகையில் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்னால் கொண்டுவருவதற்கு பொலிஸாரின் நேரடி உதவியைப் பெற்றுக் கொள்ள மத்திய சூழல் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்குத் தேவையான சட்ட ஒழுங்குகளைத் தயார் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என கழிவுப் பொருள்கள் முகாமைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் உபாலி இந்திரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி, பொலிஸார் சாதாரணமாக போக்குவரத்து ஒழுங்குகளைப் பேணுவதைப் போன்று, சூழல் சட்ட திட்டங்களையும் செயற்படுத்துவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வருடத்தின் ஆரம்பம் முதல் சட்டவிரோத பொலிதீன் உற்பத்தியாளர்கள் 300 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்றார்

## இருபது பேர் அமைச்சரவையும் அறிவிப்பு



இஸ்லாமாபாத், ஓக.20

பாகிஸ்தான் பிரதமராக முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் நேற்று முன்தினம் பதவியேற்றநிலையில் 20 பேர் அடங்கிய தனது அமைச்சரவையை அவர் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி, கூடுதல் இடங்களைப் பிடித்து தனிப்பெரும் கட்சியாக வந்தது. சிறிய கட்சிகளின் ஆதரவுடன் அந்தக் கட்சி பாகிஸ்தானில் கூட்டணி அரசு அமைத்துள்ளது.

இஸ்லாமாபாத்தில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில், பாகிஸ்தானின் 22 ஆவது பிரதமராக இம்ரான் கான் நேற்று முன்தினம் பதவியேற்றார். அவருக்கு ஜனாதிபதி மம்னூன் உசேன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிலையில், 20 பேர் அடங்கிய தனது அமைச்சரவையை இம்ரான் கான் அறிவித்துள்ளார். அதில், பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சராக பர்வேஸ் கட்டாக், நிதி அமைச்சராக ஆசாத் உமர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சராக மக்தூம் மகமுது ஹூசைன் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் அமைச்சரவையில் 15 பேர் அமைச்சர்களாகவும், 5 பேர் ஆலோசகர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# அமெரிக்காவுடன் நேரடிப் பேச்சுக்கு தலிபான் தரப்பு விருப்பம் தெரிவிப்பு

காபூல்: ஓக.20

ஆப்கானிஸ்தானில் அமைதி திரும்ப வேண்டும் என்றால் எங்களுடன் அமெரிக்கா நேரடி பேச்சு நடத்த வேண்டும் என தலிபான்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் இராணுவத் தலைமையகம் பென்டகன் மீதும், நியூயார்க் உலக வர்த்தக மையம் மீதும் 2001ஆம் ஆண்டு அல் கொய்தா பயங்கரவாத அமைப்பினர் விமானங்களை மோதி தாக்குதல் நடத்தி 3 ஆயிரம் பேரை கொன்று குவித்தனர்.

உடனே தலிபான்களுக்கு புகலிடம் அளித்துவந்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்து, தலிபான்களை ஆட்சியில் இருந்து அகற்றியது. அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப்படைகளுக்கும், தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப்போர் மூண்டது. தொடர்ந்து 18 ஆவது ஆண்டாக அது நீடிக்கிறது.

சமீபத்தில் கஜினி நகரை பிடிப்பதற்காக தலீபான்கள் கடுமையாகச் சண்டையிட்டனர். இந்த சண்டையில் ஆப்கானிஸ்தான் படையினர் 100 பேரும், அப்பாவி பொதுமக்கள் 35 பேரும் பலியாகினர்.

இந்த நிலையில் உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டு வருவது பற்றி தலிபான்கள் தலைவர் மவுலவி ஹைபதுல்லா அகுன்ஜதா வெளியிட்டு உள்ள அறிக்கையில், ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு இருக்கிற வரையில் அமைதிக்கு வழி இல்லை. அமைதி திரும்ப வேண்டும் என்றால் எங்களுடன் அமெரிக்கா நேரடி பேச்சு நடத்த வேண்டும் எனக் கூறி உள்ளார். (கு)

# பசுபிக் பெருங்கடலில் பிஜி அருகே அதி பயங்கரமான நிலநடுக்கம்

சுவா: ஓக.20

பிஜி தீவின் அருகே பசிபிக் பெருங்கடல் பகுதியில் நேற்றுக் காலை 8.2 ரிக்டர் அளவில் அதிபயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஓஷியனியா கண்டத்தில் பசிபிக் பெருங்கடலின் தெற்கு பகுதியில் தீவு கூட்டங்களை கொண்ட பிஜி நாடு அமைந்துள்ளது. இங்கு சுமார் 9 லட்சம் மக்கள் மட்டுமே வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், அருகாமையில் உள்ள டோங்கா நாட்டில் இருந்து 442 கிலோமீட்டர் மேற்கே பிஜி தீவின் அருகே பசிபிக் பெருங்கடல் பகுதியில் நேற்று காலை அதிபயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

லெவுக்கா மற்றும் ஓவாலாவ் தீவுகளுக்கு இடையே உள்ளூர் நேரப்படி அதிகாலை 1.19 மணியளவில் பசிபிக் பெருங்கடலின் நீர்மட்டத்தில் 559.6 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 8.2 அலகுகளாக பதிவாகியுள்ளது.

நேற்றைய நிலநடுக்கம் பல வினாடிகள் நீடித்ததாகவும் லாவ் தீவு கூட்டங்களில் அதிகமாக உணரப்பட்டதாகவும் தெரிகிறது. சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை. எனினும், அப்பகுதியில் கடல் அலைகள் ஆர்ப்பரிப்புடன் கொந்தளிப்பாக காணப்படுவதாக அமெரிக்க புவிசார் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# சிரிய மறுசீரமைப்புக்கு உதவ முன்வருமாறு ஐரோப்பிய நாடுகளுக்கு புடின் அழைப்பு

அகதிகள் மீண்டும் தாய்நாடு திரும்பும் வகையில் சிரியாவில் மறுசீரமைப்பு நடைவடிக்கைகளை மேற்கொள்ள ஐரோப்பிய நாடுகள் முன்வர வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆஸ்திரிய வெளியுறவுத்துறை அமைச்சர் கரின் க்நீஸ்ல் திருமணம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்க ஆஸ்திரியா சென்ற ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் திருமண நிகழ்சிகள் முடிவடைந்த பிறகு ஜேர்மனி பயணம் செய்தார்.

அங்கு, தலைநகர் பேர்லினில் இருந்து 70 கி.மீ தொலைவில் அமைந்துள்ள மெஸ்பெர்க் கோட்டையில் அந்நாட்டு சான்ஸ்லர் ஏஞ்சலா மெர்க்கெல்லை புடின் சந்தித்து பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது இருநாடுகளுக்கு இடையே நீண்ட நாள்களாக நீடித்து வரும் இயற்கை எரிவாயு குழாய்பதிப்பது தொடர்பான பிரச்சினை, உக்ரைன் விவகாரம் மற்றும் சிரியா தொடர்பான ஆலோசனைகளில் இருநாட்டு தலைவர்களும் ஈடுபட்டனர்.



அப்போது, வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள லட்சக்கணக்கான சிரியா அகதிகள் மீண்டும் தாய்நாடு திரும்ப ஏதுவாக மனிதாபிமான அடிப்படையில் அங்கு மறுசீரமைப்பு நடைவடிக்கைகளை மேற்கொள்ள ஐரோப்பியநாடுகள் முன்வரவேண்டும் என புடின் அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்-

சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்ட அந்நாட்டு மக்கள் சுமார் 10 லட்சம் பேர் ஜோர்தா னிலும், 10 லட்சம் பேர் லெபனான் நாட்டிலும் மற்றும் சுமார் 30 லட்சம் பேர் துருக்கியிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

ஜேர்மனியும் லட்சக்கணக்கான அகதிகளுக்கு தஞ்சம் அடைய அனுமதித்துள்ளதால் அகதிகள் விவகாரம் ஐரோப்பாவிற்கு ஒரு பெரியசுமையாக உள்ளது. போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் வெளிநாடுகளில் தஞ் சம் அடைந்துள்ள லட்சக்கணக்கான சிரியா அகதிகள் மீண்டும் தாயகம் திரும்புவதற்கு வழிவகை செய்யும்.

எனவே, மனிதாபிமான அடிப்படையில் சிரியாவில் மறு சீரமைப்பு செய்ய தேவையான நிதியுதவியை வழங்க ஐரோப்பிய நாடுகள் முன்வர வேண்டும்- என்று புடின் அழைப்பு விடுத்தார்

# கோபி அன்னானின் மறைவுக்கு கானா நாட்டில் ஒரு வார துக்கம்!


## ஐ.நா. பொது செயலாரும் இரங்கல்

அக்ரா: ஓக.20

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச்செயலாளர் கோபி அன்னான் மறைவுக்கு அவரதுதாய்நாடானகானாவில் ஒருவாரம் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஏழாவது செயலாளராகப் பதவி வகித்தவர் கோபி அன்னான். கானா நாட்டில் 8.4.1938 அன்று பிறந்த இவர் 1.1.1997 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 31.12.2006 அன்று ஓய்வு பெற்றார்.

அமைதியான உலகத்திற்காக உழைத்ததமைக்காக கோபி அன்னான் மற்றும் ஐக்கிய நாடுகளுக்கு கூட்டாக அமைதிக்கான நோபல் பரிசு விருது வழங்கப்பட்டது.



பதவி ஓய்வுக்கு பின்னர் 23.2.2012 முதல் 31.8.2012 வரை, சிரியாவிற்கான ஐ.நா. அரபு லீக் கூட்டுச் சிறப்பு பிரதிநிதியாக இருந்தார்.

சுவிட்சர்லாந்து நாட்டில் தங்கியிருந்த கோபி அன்னான் (வயது 80) உடல்நலக்குறைவால் பெர்ன் நகரில் உள்ள மருத்துவமனையில் நேற்று முன்தினம் மரணம் அடைந்தார்.

கோபிஅன்னான்மறைவையொட்டி அவர் பிறந்து, வளர்ந்த நாடான கானாவில் ஒருவார காலம் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என கானா ஜனாதிபதி நானா அக்குஃபோ-அட்டோ அறிவித்துள்ளார்.

'கோபி அன்னான் பல வகைகளில் ஐக்கிய நாடுகள் சபையாகவே திகழ்ந்தார்' என்று புகழாரம் சூட்டியுள்ள ஐ.நா. சபை பொது செயலாளர் அன்ட்டோனொயோ குட்டெரஸ், 'அவரை எனது நல்ல நண்பராகவும், வழிகாட்டியாகவும் பெற்றமைக்காக பெருமை கொள்கிறேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், பிரிட்டன் பிரதமர் தெரசா மே, ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சஞ்சேஸ் உள்ளிட்ட உலக தலைவர்கள் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

### அமெ.தேர்தல் முறைகேடு விசாரணை;

# ட்ரம்பின் உதவியாளருக்கு 6 மாத சிறைக்கு சிபாரிசு

வொஷிங்டன்: ஓக.20

அமெரிக்க ஜனாதிபமதித் தேர்வில் ரஷ்ய தலையீடு பற்றி மத்திய புலனாய்வுப் பிரிவு விசாரணையின் போது பொய் கூறினார் என ட்ரம்பின் பிரசார உதவியாளர் ஒப்புக்கொண்டமையால் அவருக்கு 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்குமாறு விசாரணைக்குழு சிபாரிசு செய்து உள்ளது.

அமெரிக்காவில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலில், குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்ட ட்ரம்ப் வெற்றி பெறவும் ஜனநாயக கட்சி வேட்பாளராகக் களம் இறங்கிய ஹிலாரி கிளிண்டன் தோல்வி அடையவும் ரஷ்யா நேரடியாகத் தலையிட்டது என்று புகார் எழுந்தது.

இது தொடர்பாக ராபர்ட் முல்லர் தலைமையிலான குழுவின் சிறப்பு விசாரணை நடைபெற்று வருகிறது.

இதில், ட்ரம்பின் பிரசார உதவியாளராக செயல்பட்ட ஜோர்ஜ் பப்படோபவுலஸ், ரஷ்யாவுடனான தனது தொடர்புகள் பற்றி எவ்.பி.ஐ. என்னும் மத்திய புலனாய்வுப்பிரிவு விசாரணையின்போது தாம் பொய் கூறினேன் என ஒப்புக்கொண்டார்.

இந்த நிலையில், அவருக்கு 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்குமாறு நீதிமன்றத்துக்கு ராபர்ட் முல்லர் விசாரணைக்குழு சிபாரிசு செய்து உள்ளது. இது தொடர்பான சிபாரிசில், இந்தத் தண்டனை தேவையானது, இந்த தண்டனை சரியானது என கூறப்பட்டு உள்ளது.

மேலும், ஜோர்ஜ் பப்படோபவுலஸ், விசாரணையைக் கெடுக்கும் நோக்கத்துடன்தான் உண்மைகளை மறைத்து உள்ளார் எனவும் கூறப்பட்டு உள்ளது.

இந்த வழக்கில் ஜோர்ஜ் பப்படோபவுலஸ்க்கு விதிக்கப்படுகிற தண்டனை விவரம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனத் தகவல்கள் கூறுகின்றன.

# வாஜ்பாய் அஸ்தியின் ஒரு பகுதி இன்று தமிழக கடல் நதிகளில்!

டில்லி,ஓக.20

மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் அஸ்தி இன்று சென்னை கொண்டுவரப்பட்டு தமிழக மக்கள் அஞ்சலிக்கு பின்னர் கன்னியாகுமரி, இராமேஸ்வரம் உள்ளிட்ட கடல் பகுதிகளில் கரைக்கப்படுகிறது.

முன்னாள் பிரதமரும் பாரதீய ஜனதாவின் முதுபெரும் தலைவருமான வாஜ்பாய் கடந்த 17 ஆம் திகதி மரணம் அடைந்தார். அவரது உடல் முழு அரசு மரியாதையுடன் டில்லியில் தகனம் செய்யப்பட்டது.

வாஜ்பாய் அஸ்தியை நாடு முழுவதும் உள்ள முக்கிய நதிகள் மற்றும் கடல்களில் கரைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு அஸ்தி கலசத்தை எடுத்து வருவதற்காக மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், இல.கணேசன் எம்.பி. ஆகியோர் டெல்லி சென்றுள்ளனர். அஸ்தி கலசம் இன்று



சென்னை கொண்டுவரப்படுகிறது.

இதுபற்றி பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தவை வருமாறு–

தமிழகத்தின் மீது தனிப் பாசம் கொண்டிருந்த தன்னிகரற்ற தலைவர் வாஜ்பாயின் அஸ்தி தமிழக மக்கள் அஞ்சலிக்காக இன்று சென்னை கொண்டுவரப்படுகிறது.

கன்னியாகுமரி, இராமேஸ்வரம் ஆகிய கடல் உள்பட பல இடங்களில் அஸ்தியை கரைப்பது பற்றி தமிழக தலைமை முடிவு செய்யும் என்று தெரிவித்தார்.

இதுபற்றி தமிழக பா.ஜனதா தலைவர் தமிழிசை சவுந்திரராஜன் தெரிவித்தவை வருமாறு–

அனைத்து மாநில பாரதீய. ஜனதா தலைவர்களும் டில்லியில் ஜ்பாய் அஸ்தியை பெற்று அந்த அந்த மாநிலங்களில் உள்ள நதிகள், கடல்களில் கரைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நானும் முக்கிய நிர்வாகிகளும் இன்று (நேற்று) டெல்லி சென்று அஸ்தியை பெற்றுக் கொள்வோம். அதை தமிழகத்தில் 6 இடங்களில் கரைக்க முடிவு செய்துள்ளோம்.

சென்னையில் அடையாறு கடலில் கலக்கும் இடம், மதுரையில் வைகை ஆறு, திருச்சி ஸ்ரீரங்கத்தில் காவிரி ஆறு, கோவையில் பவானி ஆறு, கன்னியாகுமரி கடல் ஆகிய இடங்களில் கரைக்கப்படும்.– என்றும் அவர் கூறினார்.

## தமிழகக் கல்லூரிகளில் கைபேசிகளுக்குத் தடை

தமிழகத்தில் கல்லூரிகளில் மாணவ – மாணவிகள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தத் தடை விதித்து கல்லூரி பொலிஸ் இயக்குநரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழகக் கல்லூரியில் படிக்கும் மாணவ – மாணவிகளுக்கு ஆடை கட்டுப்பாடு உட்படப் பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. சில கல்லூரிகள் இந்த கட்டுப்பாடுகளைப் கடுமையாகப் பின்பற்றி வருகின்றன.

இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்பட அனைத்து கல்லூரிகளிலும் மாணவ, மாணவிகள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கல்லூரி பொலிஸ் இயக்குநரகம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கையடக்கத் தொலைபேசியால் மாணவ, மாணவிகளின் கவனம் சிதறுகிறது. இதை தடுக்க இந்த முடிவை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே பள்ளிகளில் கையடக்கத் தொலைபேசிக்குத் தடை இருக்கிறது. தற்போது கல்லூரி வளாகத்தில் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் தொடக்கத்தில் கல்லூரி பொலிஸ் இயக்குநர் சாருமதி இதற்கான உத்தரவை அனைத்து மண்டல பொலிஸ் இணை இயக்குநர்களுக்கு பிறப்பித்துள்ளார். அவர்கள் மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள், தனியார் கல்லூரி நிறுவனங்களுக்கு இந்த உத்தரவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கேரள வெள்ளத்தில் தவிப்பவர்களை கண்டுபிடிக்க 5 செயற்கை கோள்கள்!

கேரளா, ஓக.20

'இஸ்ரோ' நிறுவனம் வெள்ளத்தில் சிக்கியவர்களை கண்டுபிடிப்பதற்கு 5 செயற்கைகோள்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்துள்ளது.

கேரளாவில் பெரும்பாலான வீதிகள் துண்டிக்கப்பட்டு இருப்பதால் அந்தப் பகுதிகளில் எவ்வளவு பேர் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர் என்ற விவரம் தெரியவில்லை.

மின்சாரம் இல்லாமல் தகவல் தொடர்பு சாதனங்களும் துண்டிக்கப்பட்டு இருப்பதால் அவர்களது நிலை பற்றி அறிய முடிய வில்லை. அங்கு சிக்கி இருப்பவர்களும் வெளி இடங்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

இதையடுத்து 'இஸ்ரோ' நிறுவனம் வெள்ளத்தில் சிக்கியவர்களை கண்டுபிடிப்பதற்கு 5 செயற்கைகோள்



களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்துள்ளது.

இஸ்ரோ விண்ணில் செலுத்திய ஓசியான் சாட்-2, ரிசோர்ஸ் சாட்-2, கார்டோசாட்-2 மற்றும் 2ஏ, இன்சாட் 3 டி.ஆர். ஆகிய 5 செயற்கை கோள்களும் மழை, வெள்ளம், கடல், நிலப்பரப்பு ஆகியவற்றை ஆய்வு செய்து தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்குத் தகவல்களையும், படங்களையும் அனுப்பி வருகிறது. இந்த 5 செயற்கை கோள்களும் தற்போது கேரளாவில் சிக்கியவர்களைக் கண்டுபிடிக்கவும், மீட்பு பணிக்கு உதவவும் பன்படுத்தப்படுகின்றன.

5 செயற்கைகோள்களும் கேரளாவை அப்படியே துல்லியமாகப் படம் பிடிக்கும். சாலையில் செல்லும் காரின் எண்ணைக்கூட படம் பிடிக்கும் சக்தி வாய்ந்த கமராக்கள் உள்ளன.

அதன் மூலம் கேரளாவில் வெள்ளத்தில் சிக்கி இருப்பவர்களை கண்டுபிடித்து ஐதராபாத்தில் உள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்கு தகவல் அனுப்பும். அந்த தகவல் கேரளாவில் முகாமிட்டுள்ள மீட்பு படையினருக்கு தெரிவிக்கப்பட்டு மக்கள் மீட்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

## நிலச்சரிவில் சிக்கித் தவித்த நடிகர் ஜெயராம் குடும்பம் மீட்பு!



ஜெயராம் குடும்பத்தினரும் நிலச்சரிவில் சிக்கினார்கள். திருச்சூர் மாவட்டத்தில் ஜெயராம் தனது மனைவி பார்வதி, மகள் மாளவிகாவுடன் காரில் சென்று கொண்டு இருந்தார்.

கேரளாவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், நடிகர் ஜெயராம், மனைவி மகளுடன் மீட்கப்பட்டுள்ளார்.

கேரளாவில் கன மழை பெய்து வருவதால் ஊரெல்லாம் வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கிறது.

வெள்ளத்தில் சிக்கிய மக்களை பேரிடர் மீட்பு குழுவினர் படகுகளில் அழைத்துவந்து நிவாரண முகாம்களில் தங்க வைக்கின்றனர். இந்த மழை வெள்ளத்தில் நடிகர்களும் சிக்கி உள்ளனர்.

திருவனந்தபுரத்தில் உள்ள பிருதிவிராஜ் வீட்டுக்குள் புகுந்த வெள்ளத்தில் சிக்கிய அவரது தாயார் மல்லிகா சுகுமாரனை படகில் மீட்டனர்.

இதேவேளை, நடிகர்

தேசிய நெடுஞ்சாலையில் குதிரன் என்ற இடத்தில் வந்து கொண்டு இருந்தபோது, திடீரென்று நிலச்சரிவு ஏற்பட்டது. உயரத்தில் இருந்து மண் சரிந்து வந்து வீதியில் விழுந்தது. இதில் லொறி, கார் உள்ளிட்ட வாகனங்கள் சிக்கித் கொண்டன.

அந்த பகுதியில் வந்து கொண்டிருந்த ஜெயராம் காரையும் மண் சூழ்ந்தது. உடனடியாக பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

வடக்கன்சேரி பொலிஸார் விரைந்து சென்று ஜெயராம் குடும்பத்தினரை பத்திரமாக மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளனர்.

# பெங்களூரு சிறையில் சசிகலா பிறந்த நாள்

## டி.டி.வி.தினகரன் நேரில் சென்று வாழ்த்து





பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் சசிகலாவை நேற்று முன்தினம் சந்தித்த டி.டி.வி. தினகரன் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றுள்ள சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். இந்த நிலையில், நேற்று முன்தினம் சசிகலாவுக்குப் பிறந்தநாள் ஆகும்.

இதையொட்டி, அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் துணை பொதுச்செயலாளரும், எம்.எல்.ஏ.வுமான டி.டி.வி. தினகரன் தனது மனைவி அனுராதா மற்றும் குடும்பத்தினருடன் நேற்று முன்தினம் பரப்பன அக்ரஹாரா சிறைக்கு வந்தார்.

பின்னர், அவர்கள் சிறையில் உள்ள சசிகலாவைச் சந்தித்து அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து இனிப்புகள் வழங்கினர். இந்தச் சந்திப்புக்குப் பின்னர் சிறையில் இருந்து வெளியே வந்த டி.டி.வி. தினகரன் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது, அவர் தெரிவித்தவை வருமாறு :-

கர்நாடகத்தில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் வீணாகக் கடலில் கலந்து வருகிறது. தமிழகத்தில் ஏரி, குளங்களை தூர்வார தமிழக அரசு ரூ.400 கோடி ஒதுக்கீடு செய்தது. இந்தப் பணம், தூர்வாரும் பணி என்ற பெயரில் வீணடிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் ஏரி, குளங்கள் தூர்வாரப்படும். இதற்கு மாறாக, தண்ணீர் திறக்கப்படும் காலங்களில் ஏரி, குளங்கள் தூர்வாரப்படும் எனக் கூறுவது எந்த விதத்தில் நியாயம்?

காவிரியில் அதிகளவில் தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளதால் தமிழகத்தில் தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதை இந்த அரசு ஒருபோதும் செய்யாது.

ஊழல் செய்வதற்கான ஒரு திட்டம் என்று கூறினால் அது தமிழக அரசின் தூர்வாரும் திட்டம்தான். தமிழக அரசு ஏழை, எளிய மக்கள் மற்றும் விவசாயிகளின் வயிற்றில் அடித்து வருகிறது. தமிழகத்தில் தற்போது நடக்கும் ஆட்சி விரைவில் முடிவுக்கு வரும்.

திருப்பரங்குன்றம் மற்றும் திருவாரூர் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடந்தால் குக்கர் சின்னம் தான் வெற்றி பெறும். சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதிநீக்க வழக்கு எப்போதோ முடிந்திருக்க வேண்டியது. காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. நீதிமன்றக் கருணையால் தமிழகத்தில் இந்த ஆட்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## எல்லையில் துப்பாக்கிச் சூடு! இந்தியா மீது பாக். சீற்றம்

எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அருகே இந்திய இராணுவம் துப்பாக்கி சூடு நடத்தியதற்கு கண்டனம் தெரிவித்து இந்தியத் துணை தூதருக்கு பாகிஸ்தான் அழைப்பானை அனுப்பியுள்ளது.

ஜம்மு – காஷ்மீர் மாநிலம், இந்தியா – பாகிஸ்தான் எல்லை கட்டுப்பாட்டு கோடு அமைந்துள்ள தானா பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இந்திய ராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பாகிஸ்தானை சேர்ந்த 65 வயது மதிக்கத்தக்க நபர் உயிரிழந்துள்ளார் என்றும், 6 வயது சிறுவன் படுகாயம் அடைந்துள்ளன என்றும் பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

இந்நிலையில், இந்திய ராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டுக்குக் கண்டனம் தெரிவித்து இந்தியத் துணை தூதர் ஜே.பி.சிங்கிற்கு பாகிஸ்தான் நேற்று முன்தினம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

அதில், சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு எதிராகப் பொதுமக்களை வேண்டுமென்றே இலக்கு வைத்துத் தாக்குவது வன்மையாக கண்டிக்கத்து. போர் நிறுத்தத்தை மீறி துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளதால் பிராந்திய அமைதிக்கும். பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகளுக்கு மேலாக படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில் தற்போது அத் துறைமுகம் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அத்துறைமுகத்தை நவீனமயப்படுத்தி, அதன் ஊடாக ஏற்றுமதி, இறக்குமதி வர்த் தங்களையும் போக்குவரத்துக்களையும் மேற்கொள்ள அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது.

நோர்வே அரசின் உதவியுடனும் இலங்கை அரசின் நிதிப் பங்களிப்புடனும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்கே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளார்.

இந் நிகழ்வில் ஜனாதிபதியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மீன்பிடித் துறை அமைச்சர் காமினி விஜிதமுனி டி சொய்சாவும் பங்குபற்றவுள்ளனர்.

இதேவேளை, வடமராட்சி கடற்பரப்பில் சட்டவிரோதக் கடலட்டை பிடித்த 81 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சில மணி நேரங்களிலேயே விடுவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஜனாதிபதியின் வருகையை எதிர்த்தும் தாங்கள் போராட்டம் நடத்தவுள்ளனர் என வடமராட்சி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மீனவர் சங்க சமாசப் பிரதிநிதிகள் இன்று கூடி கலந்தாலோசித்து இறுதி முடிவை எடுக்கவுள்ள னர் எனத் தெரிகின்றது.

## கூட்டமைப்பைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனதில் எழுந்ததுண்டு.

எம்மினத்துக்காகத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்யத் துணிதவர்களிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தால் இதைவிட இரண்டு மடங்கு வினைத்திறனாகவும், நேர்மையாகவும் செய்வார்கள்.

செய்யக்கூடிய பலர் இருக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துரோகம் செய்யுமெனில் அவ்விடயம் தூசி தட்டப்படும். என்னைப் பொறுத்தமட்டில் கூட்டமைப்பு சரியாகப் பயணிக்கின்றது. கடந்த காலத்தில் பிரிந்து சென்றவர்களிடம் அதற்கான காரணத்தைக் கேட்டுப்பாருங்கள்.

அதற்கு பின்னால் ஏதேனும் உப்புச் சப்பில்லாத காரணம் தான் அதிகமாக இருக்கும். தங்கள் சுயநல னும் தனிப்பட்ட கட்சி அரசிய லும், ஆசன ஒதுக்கீட்டுப் பிரச்சினைகளும்தான் அதிகம்.

மக்கள் நலனும், கடந்த கால உயிர் இழப்புகளுக்கு அர்த்தம் தேட வேண்டுமென்று ஒரு துளியேனும் நினைத்திருந்தால் அந்தத் தவறைச் செய்திருக்கமாட்டார்கள்.

ஒருசில பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைச் சீர்செய்ய வேண்டிய பொறுப்பு உங்களைப் போன்ற பெரியவர்களிடம் உள்ளது. இந்தப் பொறுப்பில் இருந்து தவறிவிடவேண்டாம். தந்தை செல்வா கூறிய ஒரு விடயம் ஞாபகத்துக்கு வருகின்றது 'தமிழரை கடவுள்தான் காப்பாற்றவேண்டும்' என்பது.

உங்களைப் போன்ற எம்மை வழி நடத்த வேண்டியவர்களும், பெரியவர்களும் வழி தடுமாறிச் செல்வீர்கள் என்றால் உங்களைப் போன்றோரைக் கடவுளும் மன்னிக்கமாட்டார்.

உங்களைப் போன்றோருக்கு அறிவுரையும் ஆலோசனையும் சொல்லக்கூடிய அனுபவமும் வயதும் எனக்கில்லை. ஒத்துக் கொள்கின்றேன்.

ஆனால், கடந்த காலத்தில் விதைக்கப்பட்ட ஒவ்வொரு விலைமதிப்பற்ற உயிரும் அர்த்தமற்றதாகிவிடும் என்ற வேதனையிலும், வலியிலும் இந்த வேண்டுகோள்களைத் தங்களிடம் முன்வைக்கின்றேன்.

எனக்கும் உங்களுக்கும் இடை யில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கலாம். அதை மனதில் வைத்துக்கொண்டு மேற்படி விடயத்தைப் பார்க்கவேண்டாம். அவ்வாறு பார்ப்பீர்கள் என்றால் நான் கூறுவது பிழையாகத்தான் தெரியும்.

தென்பகுதியில் உள்ளவர்கள் எம்மை எவ்வாறு பிரித்துக்கையாளலாம் என்று நினைக்கின்றார்களோ அதற்காக அவர்கள் எந்த வித முயற்சியும் எடுப்பதற்கு முன்னமே நாம் பிரிந்து நிற்கின்றோம்.

ஆண்டாண்டுகாலமாக எம்மினத்தின் பின்னடைவுக்கும் வீழ்ச்சிக்கும் பின்னால் பிற இனத்தவர்களைவிட எம்மினத்தவர்கள் தான் அதிகமாகவுள்ளனர்.

நாம் ஏன் இதை மாற்றி அமைக்கக்கூடாது? சிந்தித்துச் செயற் படுங்கள். செயல் வடிவம் கொடுப்பதற்கு நான் தயார்.– என்றுள்ளது. (ஐ)

## விலக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் தலையில் படுகாயமடைந்த அவர் பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு காரைநகர் கருங்காலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நடராஜா தேவராஜா (வயது 54) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்திருக்கின்றார்.

இந்தச் சம்பவம் குறித்துக் கூறப்படுபவை வருமாறு:–

நேற்று முன்தினம் இரவு மேற்படி குடும்பஸ்தரின் மருமகன் தனது மோட்டார் சைக்கிளில் காரைநகர் புது வீதி வழியே வந்திருக்கின்றார்.

அச்சமயம் எதிரோ வந்த 'டிமோ பட்டா' வாகனத்தில் ஒரு குழுவினர் எதிர்த்திசையில் பயணித்துள்ளனர்.

தம்மைக் கடந்து சென்ற மோட்டார் சைக்கிள் சாரதி இரவு வாகன வெளிச்சத்தை 'டிம்' பண்ணாமல் சென்றமையால் கோபமுற்ற அக்குழுவினர், வாகனத்தைத் திருப்பிக் கொண்டு அந்த மோட்டார் சைக்களில் சென்ற இளைஞரின் வீட்டைத் தேடிச் சென்றுள்ளனர்.

அந்த இளைஞருடன் அவரின் வீட்டில் தர்க்கப்பட்டு அவர்கள் முறுகிய சமயம், அதனை விலக்குப் பிடிக்க அவரது மாமனார் இடையில் சென்றுள்ளார்.

அப்போது தள்ளுமுள்ளுப் பட்டதில் குடும்பஸ்தர் நிலத்தில் விழுந்து தலையில் படுகாயமடைந்தார்.

அதில் மயக்கமடைந்த குடும்பஸ்தர் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். – என்று கூறப்பட்டது.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஐவர் நேற்றுத் தமது சட்டத் தரணி ஊடாக ஊர்காவற்றுறைப் பொலிஸில் சரணடைந்தனர். அவர்கள் தற்போது பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் நேற்று மாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## 'ஸ்ரீலங்கன்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லஞ்ச ஊழல் தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்படவுள் ளார்.

இப்பிரிவின் விசார ணைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன எனவும் கூறப்படுகின்றது.

ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடி தொடர்பில் கண்டறிவதற்கு நியமிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையிலும் இந்த அதிகாரியின் பெயர் மேலெழுந்துள்ளது.

இந்த நபர் சேகரித்த மோசடிப் பணத்தை வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் வைப்பிலிட நடவடிக்கை எடுத்துள்ளமை தெரியவந்துள்ளதாகவும் தேசிய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தக் கட்டண அதிகரிப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் எனப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஜி.எஸ்.விதானகே தெரிவித்தார்.

ரயில் சேவைக்கான ஆரம்பக் கட்டணமான 10 ரூபா என்ற நிர்ணயம் மாற்றப்படாது என்று அவர் குறிப்பிட்டார்.

ரயில் கட்டணங்கள் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகரிக்கப்படுகின்றன எனவும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஜி.எஸ்.விதானகே சுட்டிக் காட்டினார்.

## வெடுக்குநாறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 9 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

நெடுங்கேணி ஒலுமடு பகுதியில் உள்ள வெடுக்குநாறி மலை மீது ஆதி ஐயனார் ஆலயம் அமைந்துள்ளது. அங்கு மக்கள் காலங்காலமாக வழிபடுகின்றனர். தற்போது அது தொல்லியல் திணைக்களத்துக்குச் சொந்தமானதென அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி அந்த ஆலயத்தை சேர்ந்தவர்களை நெடுங்கேணிப் பொலிஸார் அழைத்து விசாரணைக்கும் உட்படுத்தியிருந்தனர். ஆலயத்துக்குச் செல்லவேண்டாமென்றும் மீறிச் சென்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர். அதற்கு மறுநாள் ஆடி அமாவாசை திதி என்பதால் தொல்லியல் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் அனுமதியுடன் அங்கு சென்று பூசை வழிபாடுகளை அடியவர்கள் மேற்கொண்டனர்.

கடந்த 12ஆம் திகதி மீண்டும் ஆலய நிர்வாகத்தினரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார், ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ளத் தடையில்லையெனக் குறிப்பிட்டனர்.

ஆனால், ஆலயத்தில் மாற்றங்கள் செய்தல், கட்டடங்களை அமைத்தல் போன்ற எந்த நடவடிக் கையும் எடுக்கக்கூடாதென அறி வுறுத்தியுள்ளனர். ஆலயத்தைச் சூழவுள்ள காட்டுப் பகுதி தொல்லி யல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால், அங்கு செல்லக்கூடாதென்றும் மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழர்களின் எல்லைக் கிராமப் பகுதியில் காணப்படும் இந்த ஆலயத்தை காலங்காலமாகத் தரிசித்து வந்த நிலையில், அதனை அபகரிக்க முயல்கின்றனர் என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

## ஜப்பான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரொருவர் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளமை இதுவே முதன்முறையாகும்.

அமைச்சர் ஒனோடெரா இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அரசாங்கத்தின் உயர் மட்டத் தலைவர்கள் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன ஆகியோருடன் ஜப்பான் – இலங்கை பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், கொழும்புக்கு வெளியிலும் அவர் பயணங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான 'விரிவான பங்களிப்பு' மேலும் வலுப்பெறுவதற்கு இந்த விஜயம் உறுதுணையாக அமையும் என எதிர்பார்ப்பதாக ஜப்பானிய தூதரகம் மேலும் அறிவித்துள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்கின்றனர் சிங்களச் செய்தியாளர்கள்.

அவர் – அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என்ற சாரப்பட உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் வெளிப்படுமானால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது தலைமையில் வைத்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எஞ்சியிருக்கும் மிச்ச சொச்ச எம்.பிக்களும் கூட கூட்டு எதிரணிப் பக்கம் தாவி விடுவர் என்கின்றனர் நன்கு விடயமறிந்த – அந்த மூத்த – அரசியல் செய்தியாளர்கள்.

அதேசமயம், மீண்டும் தாம் அதிகாரத்துக்கு மிக விரைவில் வருவார் என நம்பும் மஹிந்த ராஜபக்ஷ, தமது ஆட்சியில் சிறுபான்மையினரான தமிழரைக் கையாளும் பொறுப்பை நேரடியாகத் தமது மகன் நாமல் ராஜபக்ஷ மூலமே மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றார் எனவும் நம்பகமாக அறிய வந்தது. அந்தப் பொறுப்பை ஏற்கனவே தமது மகனிடம் அவர் ஒப்படைத்தும் விட்டார்.

அதனையொட்டி பல்வேறு தமிழர் தரப்புகளுடனும் ஊடாடி வருகின்றார் நாமல் ராஜபக்ஷ.

அதன் ஓர் அம்சமாக நேற்று முன்தினம் பம்பலப்பிட்டியில் உள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை அவரது அலுவலகத்துக்கு நேரடியாகச் சென்று சந்தித்து விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கின்றார் நாமல் ராஜபக்ஷ.

அங்கு டக்ளஸ் தேவானந்தாவுடன் மட்டும் பேச்சு நடத்துவதுடன் நாமல் ராஜபக்ஷ நின்றுவிடவில்லை.

ஈ.பி.டி.பியின் ஏனைய பல பிரமுகர்களையும் ஒன்று சேர்த்து அவர்கள் அனைவருடனும் கலந்துரையாடியிருக்கின்றார் நாமல்.

ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தர்கள் பலர் விவரமாகத் தெரிவித்த கருத்துகள் பலவற்றையும் குறுக்கீடு செய்யாமல், ஆற, அமர இருந்தும் செவிமடுத்திருக்கின்றார் நாமல் ராஜபக்ஷ என்று கூறப்படுகின்றது.

ஈ.பி.டி.பியினருடன் அவர்களது அலுவலகத்தில் சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேல் நாமல் ராஜபக்ஷ அமர்ந்திருந்து கலந்துரையாடியமை மீளவும் புதிய அரசியல் செல்நெறிக்கான பாதையைத் திறந்துவிடும் ஏற்படாக இருக்கக்கூடும் என நம்பப்படுகின்றது.

இந்தச் சந்திப்புக் குறித்த தகவல்களை வெளியிடவோ, சந்திப்பு நடந்ததை உறுதிப்படுத்தவோ மறுத்து ஈ.பி.டி.பி. தரப்புகள் அவ்விடயத்தில் அதீத மௌனம் சாதித்தன. எனினும் இந்தச் சந்திப்பில் பலர் பங்குபற்றியிருந்தமையால் அது பற்றிய விவரம் விரைவில் விரிவாக அம்பலமாகும் என உறுதியாக நம்பலாம். -மின்னல்-

## உயர்நீதிமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு தடவைகள் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் மீள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற ஏற்பாடு 2015 இல் 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்டது.

ஆனால், இந்த ஏற்பாடு, அது சட்டமாக நடைமுறைக்கு வர முன்னர் இருந்த நிலைமைக்கும் பொருத்தமானதா அல்லது –

அது நடைமுறைக்கு வந்த 2015 முதலேயே செல்லுபடியாகுமா என்ற சட்டவாதம் இப்போது கிளம்பியுள்ளது.

2015 இல் 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் நடைமுறைக்கு வர முன்னர் இரண்டு தடவைகள் ஜனாதிபதிகளாகத் தெரிவு செய்யப்பட்ட சந்திரிகா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மீண்டும் போட்டியிடுவதை இந்த 19 ஆவது திருத்தம் கட்டுப்படுத்தாது என சில சட்ட விற்பன்னர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆனாலும் அரசமைப்பு வாசகங்களுக்கு வியாக்கியானம் செய்யும் பிரத்தியேக உரிமை உயர்நீதிமன்றத்துக்கு மட்டுமே உண்டு என்பதால் இவ்விடயத்தை உயர்நீதிமன்றத்திடம் எடுத்துச் சென்று தீர்வு காண்பது குறித்து – முடிவு கட்டுவது குறித்து – இப்போது ஆராயப்படுகின்றது.

வாக்காளர் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்வதன் மூலம் விளக்கம் கோரலாமா என்று சிந்திக்கப்படுகின்றது.

அதேசமயம், இந்த விவகாரத்தை மாவட்ட நீதிமன்றிடம் எடுத்துச் சென்றால், மாவட்ட நீதிமன்றம் அரசமைப்பு வியாக்கியானத்துக்காக இந்த விடயத்தை உயர்நீதிமன்றத்திடம் சமர்ப்பித்து முடிவைப் பெற்றுக் கொள்ளும் என வேறு சில சட்ட விற்பன்னர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எந்த வகையிலாவது இந்த விடயம் குறித்து உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சாதகமாகப் பெற்று, மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவையே களமிறக்குவது குறித்து அவரது தரப்பு தீவிரமாகச் சிந்தித்து வருகின்றது.

இவ்விடயம் குறித்து நேற்று பிலியந்தலைப் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார் மஹிந்த ராஜபக்ஷ.

"நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா, இல்லையா என்பது குறித்து பின்னர் பார்த்துக்கொள்வோம். முதலில் போட்டியிட முடியுமா என்பதற்கான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

"19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் தெளிவில்லாத ஒரு நிலைமை உள்ளது. 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளுக்கு அச்சட்டம் பொருந்துகின்றதா? இல்லையா? என்பது குறித்த தெளிவை உயர்நீதிமன்றத்திடம் கோரவேண்டியுள்ளது.

"தீர்ப்பு முடியும் என்றால், எனக்கு மட்டுமல்ல, முன்னர் இருந்த சகலருக்கும் அது பொருந்தும்." – எனவும் மஹிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

# விளையாட்டுத்துறை அமைச்சருக்கு இலவச ரிக்கெட் வழங்கவேயில்லை

## இலங்கை கிரிக்கெட் சபை விளக்கம்



விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா தனது ஆதரவாளர்களுக்கு வழங்குவதற்கு இலவச அனுமதிச் சீட்டுகள் எதனையும் வழங்கவில்லை என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சரின் ஆதரவாளர்கள் இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் போட்டிகளை பார்வையிடுவதற்கு 800 இலவச அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன என சில தரப்பினர் தெரிவித்துள்ளனர் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை, அமைச்சருக்கான சிறப்பு பகுதியில் அமர்வதற்கு விசேட அனுமதிச்சீட்டுகளை மாத்திரம் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு வழங்கினோம் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

SLC T20 LEAGUE 2018

# 20/20 தொடருக்கான இலச்சினை அறிமுகம்

இலங்கை கிரிக்கெட் சபையினால் நடாத்தப்படும் இருபதுக்கு இருபது தொடருக்கான முகாமையாளர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தம்புள்ளை அணியின் முகாமையாளராக வினோதன் ஜோன் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அணியின் பிரதம பயிற்றுவிப்பாளராக சுமித்ரா வர்ணகுலசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி அணியின் முகாமையாளராக பிரியந்த உதயரத்ன நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, அணியின் பிரதம பயிற்றுவிப்பாளராக பிரியல் விஜேதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு அணியின் முகாமையாளராக கஜபா பிட்டிகல நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அணியின் பிரதம பயிற்றுவிப்பாளராக அவிஷ்க குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், காலி அணியின் முகாமையாளராக நலின் டி இலங்கக்கோன் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, அந்த அணியின் பிரதம பயிற்றுவிப்பாளராக




ரொய் டயஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடருக்கான இலச்சினை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

# நட்சத்திர உதைபந்து வீரர் கெவின் டி ப்ரூயின் ஓய்வு



முன்னணி கழக அணியாக திகழும் மன்செஸ்டர் சிற்றியில் இடம்பெற்றுள்ள பெல்ஜியத்தைச் சேர்ந்த கெவின் டி ப்ரூயின், இரண்டு மாதங்கள் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதனால், இங்கிலீஷ் பிரீமியர் லீக் உதைபந்து தொடரில், எதிர்வரும் போட்டிகளிலும் அவர் பங்கேற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலீஷ் பிரீமியர் லீக் உதைபந்து தொடருக்காகப் பயிற்சியில் கலந்து கொண்ட மத்திய கள வீரரான கெவின் டி ப்ரூயின், பயிற்சியின்போது, கால் மூட்டில் உபாதைக்குள்ளானார்.

இதனையடுத்து, மருத்துவச் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட அவர், காயம் குணமடைய சுமார் இரண்டு மாதங்கள் ஓய்வில் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டார். இதனால், அவர் எதிர்வரும் போட்டிகளில் பங்கேற்கமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலீஷ் பிரீமியர் லீக் தொடரின், கடந்த 2017-18 பருவகாலத்தில் மன்செஸ்டர் சிற்றி அணி, சம்பியன் பட்டம் வெல்வதற்கு கெவின் டி ப்ரூயின் பங்களிப்பு அளப்பரியது.

அவர், இத்தொடரில், 8 கோல்கள் அடித்ததுடன் 16 கோல்கள் அடிக்க உதவிகரமாக இருந்தார். இந்த நிலையில், தற்போது அவரது இழப்பு அணிக்கு கடும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# சகலதுறை வீரரா ஹர்திக் பாண்டியா?

## ஹோல்டிங் பாய்ச்சல்



ஹர்திக் பாண்டியா சகலதுறைவீரர் இல்லை என மேற்கிந்திய அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளரும் வர்ணனையாளருமான மைக்கல் ஹோல்டிங் தெரிவித்துள்ளார்.

அவர் துடுப்பாட்ட வீரராகப் பாண்டியா சிறப்பாக விளையாடவில்லை, பந்து வீச்சிலும் அவர் துல்லியமாக பந்து வீசவில்லை எனத் தெரிவித்துள்ள ஹோல்டிங் இதன் காரணமாக அவர் இந்திய டெஸ்ட் அணியில் சகலதுறை வீரராக இடம்பிடிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய டெஸ்ட் வேகப்பந்து வீச்சுக் குழாம் தற்போது சரியான சமநிலையுடன் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் ஹர்திக் பாண்டியாவைச் சகலதுறை வீரராக விளையாடுகின்றனர். பந்து வீச்சிற்கு அவர் உதவுவார் என்ற நோக்கதிலேயே இந்திய அணி அவரை இணைத்துக்கொண்டுள்ளது என தெரிவித்துள்ள ஹோல்டிங், அவர் அணிக்கு பலனளிக்க கூடிய விதத்தில் பந்து வீசவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஹர்திக் பாண்டியா சதங்களைப் பெறவேண்டிய தேவையில்லை. அவர் 60 ,70 ஓட்டங்களைப் பெற்றாலே போதும். அத்துடன் இரண்டு மூன்று விக்கெட்களை வீழ்த்தினாலும் போதும் எனவும் ஹோல்டிங் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அவர் அந்த ஓட்டங்களை பெறுகிறார் இல்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள ஹோல்டிங், அவர் பந்து வீச்சிலும் சிறப்பாகச் செயற்படவில்லை. அது மிக முக்கியமான விடயம் என கூறினார்.

அவர் தொடர்ச்சியாகச் சிறப்பாகப் பந்து வீசவில்லை. துடுப்பாட்ட வீரர்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்கக்கூடிய துல்லிய தன்மை அவரிடம் இல்லை என தெரிவித்துள்ளார்.

நீங்கள் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் என்றால், உங்கள் அணித்தலைவர் உங்களை நம்பியிருக்க வேண்டும் என்றால் நீங்கள் விக்கெட்டை வீழ்த்தவேண்டும். உங்களிடம் துல்லியத் தன்மை அவசியம். பாண்டியா அப்படிப்பட்டவர் இல்லை எனவும் ஹோல்டிங் குறிப்பிட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவில் நான் இருந்தவேளை சிலர் அவர் அடுத்த கபில்தேவ் என தெரிவித்ததைக் கேள்விப்பட்டேன். அவர் அடுத்த கபில் தேவ் ஆகமாட்டார் என நான் தெரிவிக்கமாட்டேன். ஆனால் தற்போது அவர் அந்தத் தரத்தில் இல்லை. இந்திய துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் தொடர்ச்சியாகப் பங்களிப்புச் செய்யக் கூடிய வீரரை கண்டுபிடிக்கவேண்டும் எனவும் ஹோல்டிங் தெரிவித்தார்.

இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் பாண்டியாவைக் கடுமையாக விமர்சித்த நிலையிலேயே ஹோல்டிங்கின் இந்தக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

ஹர்திக் பண்டியாவை சகலதுறை ஆட்டக்காரர் என அழைப்பதை நிறுத்திக்கொள்ளவேண்டும் எனச் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

பாண்டியா துடுப்பாட்ட வீரராக அதிக ஓட்டங்களைக் குவிக்கவில்லை. அவரது பந்து வீச்சில் அணித்தலைவருக்கு அதிக நம்பிக்கைத் தெரியவில்லை என ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

இங்கிலாந்து சகல துறைவீரர்களின் திறமையை நாங்கள் பாண்டியாவிடம் எதிர்பாத்தோம். ஆனால் அவரால் ஒரே இரவில் சகலதுறை வீரராக முடியவில்லை என ஹர்பஜன் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# இந்திய கல்வீட்டுத் திட்டத்தையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்

## கூட்டமைப்பின் நிலைப்பாட்டை விளக்குகின்றார் சுமந்திரன்

**கொழும்பு, ஓக. 20**

**வடக்கில் வீடுகள் அமைக்கும் திட்டத்தை எந்த நாடு முன்னெடுக்கின்றது என்பது முக்கியமல்ல, ஆனால் அவ்வாறு அமைக்கப்படும் வீடுகளானது எமது மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

**அந்த வகையில் தற்போது மக்கள் விரும்புகின்ற கல் வீட்டு திட்டத்தை இந்தியாவே முன்வைத்துள்ளதாகவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**



வடக்கில் வீடுகளற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பது தொடர்பில் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளை சேர்ந்த நிறுவனங்கள் தமது திட்ட முன்மொழிவுகளை சமர்பித்துள்ளன. இந்நிலையில் இவை இரண்டு நாடுகளிலும் எந்த நாட்டு வீட்டுத் திட்டங்களை அமைப்பது என்ற சர்ச்சையான கருத்துக்கள் நிலவி வரும் நிலையில் இது தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்து அதன் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனிடம் வினவினோம்.

இது தொடர்பாக சுமந்திரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீன நிறுவனமும் 40 ஆயிரம் வீடுகளை அமைப்பதாகத் தனது திட்ட முன்மொழிவை கொடுத்துள்ளது. ஆனால் அது கல் வீடல்ல. கொங்கீறிட் போன்ற ஒன்றால் அமைக்கப்படும் வீடாகும். ஆனால் இந்தியா அதே பணத்திற்கு கல் வீட்டுத் திட்டத்தை அமைப்பதற்குத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது.

எமது மக்களுக்கு கல் வீடே விருப்பம். எனவே, இந்தியாவுடன் பேசி அவ் வீட்டுத் திட்டத்தை செய்யுமாறு அரசாங்கத்திற்கு நாம் தெரிவித்துள்ளோம்.

கேள்வி : அப்படியாயின் கூட்டமைப்பு இந்திய வீட்டுத் திட்டத்தையே விரும்புகின்றதா ?

பதில் : கூட்டமைப்பு கல் வீட்டுத் திட்டத்தைத் தான் விரும்புகின்றது. இனி நீங்கள் செய்தி எழுதும் போது இந்தியா, சீனா என்று எழுதுவீர்கள். அதற்காகத் தான் மறுபடியும் இந்தியாவா, சீனாவா என்று கேட்கின்றீர்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பானது கல் வீட்டுத் திட்டத்தைத் தான் விரும்புகின்றது. அதனைத் தான் எமது மக்கள் விரும்புகின்றார்கள். எனவே கல் வீட்டுத் திட்டத்தை இந்தியாவோ சீனாவோ, இல்லை ரஷ்யாவோ யார் கல் வீட்டைக் கட்டித் தந்தாலும் நாம் ஏற்றுக்கொள்வோம். எமது மக்களுக்குத் தேவையான, விருப்பமான கல் வீட்டுத் திட்டத்தை நடமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

இந்நிலையில் தற்போது மக்கள் விரும்புகின்ற கல் வீட்டுத் திட்டத்தை இந்தியாவே முன்வைத்துள்ளது. - என்றார்.

# தொல்லியல் ஆய்வு என்ற பெயரில் வடக்கின் கடற்பகுதி சீனாவுக்கு?

நாட்டின் வடபகுதி கரையோரப் பகுதிகளை சீனாவுக்கு குறிப்பிட்ட கால ஆண்டுகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

வரலாற்றுக் கால தொல்லியல் ஆய்வு நடவடிக்கைகளுக்காகவே சீனாவிற்கு இவ்வாறு வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

வடக்கின் பல்வேறு பகுதிகளில் வரலாற்றுக் கால தொல்லியல் ஆய்வுகளை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் யாழ்ப்பாணத்திலும் இந்த ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கடந்த 500 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை வந்த சீன கப்பல் தொடர்பாக அதன் எச்சங்களையும் சான்றுகளையும் மீட்கும் பணிகள் யாழ். அல்லைப்பிட்டிப் பகுதியில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. இதனை இலங்கை மத்திய கலாச்சார நிதியமும் சீன அரசாங்கமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளான ஊர்காவற்றுறை, நெடுந்தீவு உள்ளிட்ட பகுதிகளிலும் சீனாவின் பண்டைய கால எச்சங்கள் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டு அவற்றை மீட்பதற்காகவே இவ்வாறு சீனாவிற்கு அப் பகுதிகளை வழங்கவுள்ளதாகக் கருதப்படுகின்றது.சுமார் ஐந்து வருடங்களுக்கு இவ்வாறு தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும், இதற்காக இலங்கை அரசுடன் சீன அரசு ஒப்பந்தமொன்றை செய்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருந்த போதிலும் அவ்வாறு தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்வதாயின் சீனப் பல்கலைக்கழகமோ அல்லது சீன தொல்லியல் திணைக்களமோ நேரடியாக இலங்கை தொல்லியல் திணைக்களத்துடன் அல்லது பல்கலைகழகத்துடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டு ஆலோசிக்கப்பட்டு வருகின்றதாம்.

இந்நிலையில் இவ்வாறு வடக்கின் கரையோர பகுதிகளை, குறிப்பிட்ட கால ஆண்டிற்கு தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வழங்குவதானது இந்தியாவுக்கு எதிரான பாதுகாப்பு சார்ந்த விடயங்களுக்கான சீனாவின் செயற்பாடக அமையலாம் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கடற்புலிகளுக்கு எதிராகப் போராட உதவினாராம் பிரதமர் வாஜ்பாய்

## இந்தியத் தூதரகத்தில் வைத்து ரணில் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் கடற்புலிப்படையினருக்கு எதிராக போரில் ஈடுபட முன்னாள் இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கினார் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் இந்திய பிரதமர் வாஜ்பாயின் மறைவையொட்டி, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு நேற்றுக் காலை விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப்பட்டிருக்கும் இரங்கல் குறிப்பிடும் ஏட்டில் தனது இரங்கலைப் பதிவு செய்தார்.

இதன் பின்னர் கருத்து வெளியிடும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.


இலங்கைக்குக் கஷ்டமான காலங்களில், அவர் எப்போதும் எமக்காகப் பேசினார்.

குறிப்பாக இலங்கையுடனான நட்புறவைப் பாதுகாத்து கொள்ள வேண்டும் என அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் என்ற வகையிலும் நாங்கள் இருவரும் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அவர் பிரதமராகப் பதவிக்கு வந்த பின்னரும் எமது தொடர்புகள் தொடர்ந்தன. பிரதமர் வாஜ்பாய் தனது தொலைபேசி இலக்கத்தையும் எனக்கு வழங்கியிருந்தார். அவ்வப்போது நாங்கள் அரசியல் பற்றிப் பேசினோம்.

இதற்கு முன்னர் நான் பிரதமர் பதவிக்கு வந்த நேரத்



தில் விடுதலைப் புலிகள் பலமாக இருந்தனர்.

அப்போது யாழ்ப்பாணத்தில் நாங்கள் பாரியளவில் பின்னடைவைச் சந்தித்திருந்தோம். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது.

அப்படியான பின்னணியில் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், இராணுவத்திற்கு தேவையான பயிற்சிகளை வழங்கவும் அவர் முன்வந்தார்.

அந்த ஒத்துழைப்பு எமக்கு கிடைக்காது போயிருந்தால், அடுத்த கட்ட நடவடிக்கைகளை எம்மால் எடுக்க முடியாமல் போயிருக்கும். கடற்புலிகளின் வருகையைத் தடுத்து நிறுத்த வாஜ்பாயின் உதவி எமக்கு கிடைத்தது.

வாஜ்பாய் இலங்கை தொடர்பில் மிகவும் அக்கறை கொண்டு செயற்பட்ட தலைவர் என்பதைக் கூற வேண்டும். – எனப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.



மன்னார் வயல் வீதியில் வசித்து வரும் காஸ்பர் பிள்ளை டோரிஸ் திரேசா என்ற பெண்மணி நேற்று முன்தினம் தனது இல்லத்தில் தனது நூறாவது பிறந்த தினத்தைக் கொண்டினார். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1918 இல் பிறந்தவர். தற்போது மன்னாரில் வசித்து வருகின்றனர்.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள்
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை



20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, மாநகரசபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
கிளிநொச்சியில் – இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (தம்ரோ காட்சியறை அருகில்). 076 443 1576

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.